JESUS REDEEMS MINISTRIES

# ஊழியர் உலகம்

Volume: 16 | Issue: 07 | September 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹100 | Single Copy: ₹10



உன் பெலவீனத்திலிருந்தும், சோர்விலிருந்தும், உன்னை மீண்டும் எழுப்புவது, தேவனுடைய

# உயிர்ப்பிக்கும் வார்த்தை

# வாலிபர் உலகம்

## உள்ளே...



16




04



22

30



இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்தான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



*எனக்கு அன்பான வாலிப உள்ளங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!*

தேவனுடைய சேனை வீரர்களாகிய நீங்கள், அவருடைய வார்த்தையின் வல்லமையில் பெலப்படுவது மிகவும் அவசியமான ஒன்று. **"வாலிபர்களாகிய நீங்கள் பெலவான்களாக இருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதுகிறேன்"** என்று 1 யோவான் 2:14ல் பரிசுத்த யோவான் சொல்லுகிறார். ஜெபத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ, அதே அளவிற்கு வேத வசனத்தைத் தியானிப்பதற்கும், அதைத் தினசரி வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதற்கும் நேரம் கொடுக்க வேண்டும். காரணம், வேத வசனம் உங்களை உயிர்ப்பிக்கும், உருவாக்கும், உரமேற்றும்.

வாலிபனாகிய யோசுவாவின் வெற்றிக்குக் காரணம்: "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டு விலகாதிருப்பதாக" (யோசுவா 1:8) என்று தேவன் கட்டளையிட்டார். யோசுவாவும் அப்படியே கீழ்படிந்தார்.

## யோசுவாவை தேவனுடைய வார்த்தை உயிர்ப்பித்தது:

மோசேயின் நாட்களுக்குப் பிறகு பெரிய எழுப்புதல் பொறுப்பைச் எப்படி சுமந்து செல்வது என்று தெரியாமல் திணறிய யோசுவாவை, "நான் மோசேயோடு இருந்தது போல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு" என்று கர்த்தர் சொன்ன வார்த்தை, அந்தப் பொறுப்பை யோசுவா வெற்றியாய் நிறைவேற்றி முடிக்க அனுதினமும் உயிர்ப்பித்து வழிநடத்தியது.

ஆயி பட்டணத்தில் தோல்வி உண்டானபோது முகங்குப்புற கீழ விழுந்துக் கிடந்த யோசுவாவை, மறுபடியும் எழுப்பி, பெலப்படுத்தி உருவாக்கியது தேவனுடைய வார்த்தை. அதன்படி தன் பாளையத்தை பரிசுத்தப்படுத்தியபோது, மீண்டும் தேவபிரசன்னம், தேவபாதுகாப்பு முன் சென்று பெரிய வெற்றியைத் தந்தது. தேவனுடைய வார்த்தை யோசுவாவை உரமேற்றியதால் 31 இராஜாக்களை வீழ்த்தி, கானான் தேசத்தைச் சுதந்தரித்து பட்டணத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பங்கிட்டு கொடுக்க உறுதுணையாய் நின்றது.

இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில், தேவனுடைய வார்த்தை உங்களை உயிர்ப்பித்து, உருவாக்கி, உரமேற்றுவது மட்டுமல்லாமல் தேவனுடைய பரிபூரண சித்தத்தை செய்ய உங்களை ஏவி, எழும்பிப் பிரகாசிக்கச் செய்யும்.

யோசுவாக்களாகிய நீங்கள் தான் தேவனுக்காக வைராக்கியம் பாராட்ட வேண்டும். தேசத்தைச் சுவிசேஷத்தால் நிரப்ப வேண்டும். யோசுவாவைப் போல நீங்கள் கால் மிதிக்கும் இடத்தையும் கர்த்தருக்கு சொந்தமாக்க வேண்டும்.

**பலங்கொண்டு திடமனதாய் இருங்கள்...!**
**கர்த்தரின் வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள்...!**
**கர்த்தருடைய கரம் உங்களைப் பெலப்படுத்தும்...!**

*கிறிஸ்துவின் பணியில்*
**மோகன் சி. லாசரஸ்**



# அன்று ஓடி ஒளிந்தவர்!! இன்று...



பாஸ்டர் கோகுல் ஜோசப் அவர்களைப் பல்லடம் பகுதியில் உள்ள அவரது சபையில் சந்தித்தபோது, அவருடைய வாழ்க்கையில் நடந்த சுவாரஸ்யமான காரியங்களை எங்களோடு பகிர்ந்து கொண்டார்கள். வாலிபர் உலகம் வாசகர்களாகிய உங்களுக்கு அது பிரயோஜனமாக இருக்கும் என்று தொகுத்து வழங்குகிறோம்...

## உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

எங்களது சொந்த ஊர் மதுரை. நான் ஒரு பூசாரி குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். நாங்கள் சொந்தமாகக் கோயில் கட்டி பூஜை செய்து வந்தோம். என் தாத்தா வேல் வைத்து ஆடுவது, அரிவாள் மேல் நடப்பது போன்ற காரியங்களைச் செய்வார். இப்படி எங்கள் மதத்தின் மேல் மிகவும் வைராக்கியமாக இருந்தோம். எங்களுடைய வீட்டில் இருந்த சாமி அறையில் 200க்கும் மேற்பட்ட தெய்வங்களின் போட்டோக்களை வைத்திருபோம். அப்படி ஒரு பக்தி வைராக்கியம் உள்ள குடும்பத்தில் பிறந்தேன். இது தான் எனது சிறு வயது பிராயம். என்னுடைய சிறு வயதிலேயே நாங்கள் மதுரையிலிருந்து பல்லடம் வந்தோம்.

## உங்களது வைராக்கியமான குடும்பம்பற்றிச் சொன்னீர்கள்... ஏன் சொந்த ஊரிலிருந்து பல்லடம் போனீர்கள்?

என்னுடைய சிறு வயதிலேயே எனது அப்பாவிற்கு திருப்பூர் மாவட்டம் காங்கேயம் பகுதியில் EBயில் temporaryஆக மாதம் வெறும் 30 ரூபாய் சம்பளத்திற்கு ஒரு வேலை கிடைத்தது. நாங்கள் பல்லடம் பகுதியில் தங்கி இருந்தோம். எங்கள் வீட்டிலிருந்து சுமார் 1 மணி நேரம் பிரயாணப்பட்டு தான் அப்பா தினமும் வேலைக்குச் சென்று வருவார்கள். லைன் வீட்டில் தான் நாங்கள் 8 பேர் வசித்து வந்தோம். 30 வீட்டிற்கு ஒரு கழிவறை தான் இருக்கும். நாங்கள் கொஞ்சம் பெரியவர்கள் ஆனபோது 12 லைன் வீட்டிற்கு சென்றோம். அதில் கழிவறை இருந்தாலும் கதவு இருக்காது. அந்த வீட்டிலும் நாங்கள் குடும்பமாக வாழ்ந்து வந்தோம்.



எங்கள் வீட்டில் எல்லோரும் நல்ல சம்பாத்தியம் பண்ணி, கைநிறைய பணம் வைத்திருந்தாலும் குடும்பத்திற்குள் சமாதானமே இருக்காது. வீட்டில் நல்ல சாப்பாடு இருக்கும். ஆனால் அதை நாங்கள் சந்தோஷமாகச் சாப்பிட முடியாது. அம்மா சாப்பாடு செய்து வைத்திருப்பார்கள். அப்பா குடித்து விட்டு வந்தால் சாப்பாடு தட்டோடு பறக்கும். தினமும் குடிப்பார், தினமும் 2 பாக்கெட் சிகரெட் அடிப்பார். இதனால் எங்கள் குடும்பத்தில் நிம்மதியே இருக்காது.

## பணம் நிறைய இருந்தும் வீட்டில் சமாதானம் இல்லாததால் அதற்குப் பரிகாரங்கள் ஏதும் செய்தீர்களா?

நாங்கள் நிறைய கோவில்களுக்குப் போக ஆரம்பித்தோம். அப்பாவும் அம்மாவும் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். என்

அப்பாவிற்கு பயந்து நான், அம்மா, என் தங்கை மொட்டை மாடியில் ஒளிந்து இருந்த நாட்கள் அதிகம். இந்தச் சூழ்நிலையில் தான் அம்மாவிற்கு தெரிந்த ஒரு சகோதரி, எனக்கு ஒரு போதகரைத் தெரியும் அவரிடம் ஜெபம் பண்ணுங்கள் எல்லாம் சரியாகும் என்று சொன்னார்கள். கிறிஸ்தவர்கள் என்றாலே தாழ்ந்தவர்கள் என்று, கிறிஸ்தவர்களிடம் தண்ணி கூட வாங்கி குடிக்க மாட்டோம். அதனால் அவர்கள் வந்து ஜெபம் செய்ய வேண்டாம் என்று தட்டி கழித்துக் கொண்டே இருந்தோம். பிரச்சனை நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே இருக்கும்போது, ஒருநாள் அவர்களே அந்த ஊழியரை ஜெபம் பண்ண அழைத்து வந்து, எங்களுக்காக ஜெபித்துச் சென்றார்கள். அதன்பிறகு ஒரு மிகப்பெரிய சமாதானம் எங்களுக்குள் வர ஆரம்பித்தது. இதனால் அம்மா, அப்பா முழு மனதோடு இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்.

### உண்மையாகவா! நம்பவே முடியவில்லை... அம்மா, அப்பா 2 பேருமே இயேசுவை ஏற்றுக் கொண்டார்களா? எப்படி?

எப்படியென்றால், சில நாட்களில் என் அப்பாவிற்கு வேலை permanent ஆனது. 30 ரூபாய் சம்பளம் 2500 சம்பளமாக உயர்ந்தது. அதனால் என் அப்பாவிற்கு இயேசுவின் மேல் பெரிய நம்பிக்கை வந்தது. இவ்வளவு நாட்கள் நாம் எத்தனையோ கடவுளைத் தேடியும் எந்த மாற்றமும் இல்லை; ஆனால் கிறிஸ்தவர்கள் வந்து ஜெபித்தவுடன் இவ்வளவு அற்புதங்கள் நடக்கிறதே என்று ஆண்டவரை அதிகமாகத் தேடினார்கள். பக்கத்தில் இருந்த ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார்கள். நமக்கு வாழ்க்கை கொடுத்த ஆண்டவருக்காக நாம் வாழ வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்திற்குள் வந்தது. அம்மா மிகவும் வைராக்கியமாக இயேசுவைத் தேட ஆரம்பித்தார்கள்.

> கிறிஸ்தவர்கள் என்றாலே தாழ்ந்தவர்கள் என்று. கிறிஸ்தவர்களிடம் தண்ணி கூட வாங்கி குடிக்க மாட்டோம்.

### ஏன் அம்மாவிற்கு இயேசுவின் மேல் இவ்வளவு வைராக்கியம்?

எனது அப்பா EBயில் வேலைப் பார்த்து வந்ததால், மின்கம்பத்தில் ஏறி வேலை செய்ய வேண்டும். அப்படி ஒருநாள் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, மின்கம்பம் உடைந்து விழுந்து அடிபட்டு மூச்சுப் பேச்சு


பாஸ்டர் கோகுல் ஜோசப் தன் குடும்பத்துடன்

இல்லாமல் இருந்தார். பல்லடம் மருத்துவமனையில் முடியாது என்று சொல்லிக் கோவை மருத்துவமனைக்குக் கொண்டு வந்தோம். கோவை வரும்போது உடம்பெல்லாம் விறைத்துப் போனது. அப்பொழுதுதான் அம்மா இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்ததால் இயேசுவின் மேல் ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் நம் பரம்பரை கடவுளை விட்டு வந்ததால் தான் இப்படி ஆகிவிட்டதோ என்று நினைத்துக் கொஞ்சம் கலங்கிப் போனார்கள். ஆனாலும் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து அவர்கள் போட்டிருந்த தாலி, வளையல் எல்லாமே கழட்டி வைத்து விட்டு, ''ஆண்டவரே என் கணவரை மட்டும் குணமாக்கி கொடுத்தீர்கள் என்றால் நான் முழுவதுமாக உங்களை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று ஒரு சிறு ஜெபம் செய்தார்கள். அப்பாவுடன் வேலைப் பார்த்த நண்பர்கள் எல்லாரும் எங்களுடன் இருந்தார்கள். வண்டியிலிருந்து ஸ்ட்ரெச்சர் மூலமாகத் தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அவரைத் தூக்க வரும்போது, என்ன ஆச்சரியம்! அவரே எழும்பி நடந்து செல்ல ஆரம்பித்தார். அப்படி மரித்துப் போனவரைச் சுகப்படுத்தி எழும்பி நடக்கப் பண்ணினதை பார்த்தவுடன் அம்மாவுக்குள் பெரிய நம்பிக்கை வந்தது.

### சூப்பர்... எவ்வளவு பெரிய அற்புதம்... அம்மா அப்பா இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்? உங்களுடைய வாழ்க்கை எப்படி இருந்தது?

என் பெற்றோர் ஆலயத்திற்குப் போவார்கள். நான் இயேசுவை வெறுக்கும் நபர்களோடு இணைந்து வழிபாட்டு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபடுவது போன்ற காரியங்களைச் செய்து வந்தேன். எனக்குக் கிறிஸ்தவம் என்றாலே வெறுப்பு. அந்த நாட்களில் எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். யார் யார் ரவுடித்தனம் பண்ணுவார்களோ, அவர்கள் எல்லாருமே எனக்கு நண்பர்களாக இருப்பார்கள். பள்ளிப்பருவத்திலிருந்தே நான் உடை உடுத்துவது, முடி



வெட்டுவது எல்லாமே வித்தியாசமாக இருக்கும். 5 விரலிலும் மோதிரம் போட்டிருப்பேன். கழுத்தில் நிறைய செயின் போட்டிருப்பேன். அப்படி தான் என்னுடைய தோற்றமே இருக்கும். ''நான் இயேசுவை நம்பி இருக்கிறேன், நீ போய் இப்படி வழிபட்டுக் கொண்டிருக்கிறாயே'' என்று அம்மா அடிக்கடி சொல்லுவார்கள். **''நீ நகை எல்லாம் கழட்டிப்போட்டு விட்டு மதம் மாறினாய் என்பதற்காக நான் மதம் மாற முடியாது; எனக்கு என் தெய்வம் தான் முக்கியம்''** என்று வாக்குவாதம் செய்வேன். ஆனாலும் என்னிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எனக்குக் கடவுள்மேல் நம்பிக்கை இல்லை என்றாலும், கடவுளைக் குறித்த ஒரு வைராக்கியம் இருந்தது. இயேசு வெளிநாட்டு கடவுள் என்ற எண்ணம் எனக்குள் நிறையவே இருந்தது. அதனால் இயேசு என்றாலே எனக்குப் பிடிக்காது.

### சரி... அப்படியானால் நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்?

ஒருநாள் 10 பேரை நாங்கள் 20 பேர் சேர்ந்து அடித்தபோது ஒருவன் கீழே விழுந்தான். அந்த நபரை நான் எட்டி உதைத்தபோது, அவன் பல் உடைந்து என் காலில் குத்தி இரத்தம் வர ஆரம்பித்தது. அந்தத் தழும்பு இப்பொழுதும் எனக்கு இருக்கிறது. நாட்கள் ஆக ஆக என் கால் வீங்கிச் சீழ் கட்டி வலிக்க ஆரம்பித்தது. இதற்கிடையில் இந்தச் சண்டை ஒரு பெரிய கலவரமாகிவிட்டது. அதன்பிறகு 50 பேர் சேர்ந்து என்னை அடிக்க வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். எனக்குள் ஒரு பயம் வர ஆரம்பித்தது. நிறைய பேச்சு வார்த்தைகள் நடத்தியும், எந்தச் சமாதானம் ஆவதாக தெரியவில்லை. எனவே நீ கொஞ்ச நாட்கள் மறைவாக இரு என்று ஒருவர் சொன்னார். எங்கேப் போவது என்று தெரியாமல் மிகவும் கவலையோடு வீட்டில் டிவி பார்த்துக் கொண்டு படுத்திருந்தபோது, நாலுமாவடியில் பைபிள் காலேஜ் ஆரம்பிக்கப் போவதாக விளம்பரம் ஒன்று வந்தது. அதைபார்த்து ''அம்மா நீ அங்குப் போய்ப் பைபிள் காலேஜ் படி'' என்று சொன்னார்கள். எனக்குப் பைபிள் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் ஒரு மாதம் ஒழிந்து இருக்க வேண்டுமே என்று, ''இரவோடு இரவாக அம்மா என்னை நாலுமாவடிக்கு அழைத்து வந்தார்கள்''.

நாலுமாவடிக்கு எதற்கு வந்தேன் என்று தெரியாது. எனது தாயார் என்னைப் பைபிள் காலேஜ் வளாகத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த dean என்னுடைய தோற்றதைப் பார்த்து மேலும் கீழும் பார்த்துவிட்டு, எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார். பைபிள் காலேஜ் படிக்க வந்திருக்கிறான் என்று சொன்னவுடன் dean 5 நிமிடம் என்ன யோசித்தரோ தெரியவில்லை, சரி, என்று சொல்லிப் பைபிள் காலேஜ் சேருவதற்கான procedure முடித்து விட்டு அம்மா கிளம்பினார்கள்.

### தலைமறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக Bible college சென்றீர்கள். அங்கு உங்கள் அனுபவம்பற்றிச் சொல்ல முடியுமா?

பாடம் எடுக்கும்போது எனக்கு எதுவும் புரியாது. நான் அப்படியே தூங்கின நாட்கள் அதிகம். நான் பைபிள் காலேஜில் இருந்தாலும், எனக்குள் பாவம் இருந்தது. ஒரு மாதம் எப்படியும் இருக்க வேண்டும் என்று இருந்தேனே தவிர, எனக்கு விருப்பமே இல்லை. என்ன ஆனது என்று தெரியவில்லை ஒரு வருடம் இருந்தேன். ஆனால் எனக்குள் எந்த மாற்றமும் இல்லை. என் நண்பர்கள் எல்லாரும் ஜெபிப்பதற்காக தேவனுடைய கூடாரத்திற்கு போகும்போது என்னையும் அழைப்பார்கள்; ஆனால் நான் போகமாட்டேன் தினமும் அழைத்ததினால் வேறு வழியில்லாமல் ஒரு நாள் சென்று தான் பார்ப்போம் என்று போய் பார்த்தபோது, அவர்கள் எல்லோரும் ஜெபிப்பார்கள், நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். இப்படியே கொஞ்ச நாட்கள் அவர்களுடன் செல்லச் செல்ல அவர்கள் பாடுகிற



பாடல்கள் எனக்குப் பிடிக்க ஆரம்பித்தது. அதனால் ஒரு டைரி வாங்கி 1000 பாடல்களை எழுதினேன். ஒருசில நாட்களுக்குப் பிறகு **''நான் பைபிள் காலேஜில் இருக்கும்போது**, **''கூடாரத்திற்கு போ''** என்று ஒரு சத்தம் எனக்குள் கேட்டது. நான் உடனே டைரி, பைபிள் எடுத்துக் கொண்டு மேலே போய் முழங்கால் போட்டது தான் தெரியும், 2 மணி நேரம் விடாமல் அழுதிருக்கிறேன். எத்தனையோ போதகர்களை அடித்திருக்கிறேன், சபைகளைத் துன்புறுத்திருக்கிறேன், ஆவிக்குரிய நண்பர்களைக் கேவலமாகப் பேசியிருக்கிறேன் என்று நான் செய்த எல்லா பாவங்களையும் அறிக்கையிட்டு அழுது கொண்டே இருந்தேன். 2 மணி நேரத்திற்கு பின்பு ஒரு சத்தம், **''நீ சாதாரணமாக இங்கு வரவில்லை, உன்னை நான் தான் அழைத்துக் கொண்டு வந்தேன்; மோசேயோடு கூட இருந்தது போல உன்னோடு கூட இருப்பேன்; உன்னைக் கொண்டு செய்யும் காரியம் பயங்கரமாக இருக்கும்''** என்று ஆண்டவர் பேசினார். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் செத்தவனைப் போல் 10 நிமிடம் அப்படியே கீழே விழுந்துக் கிடந்தேன்.

## சூப்பர்... ஆண்டவர் உங்களைத் தெரிந்து கொண்டது வித்தியாசமாக இருக்கிறது... அதற்குப் பிறகு உங்களுக்குள் சந்தோஷம் சமாதானம் உண்டானதா?

'உன்னை நான் ஊழியத்திற்கு அழைத்திருக்கிறேன், உன்னைக்கொண்டு ஒரு நோக்கம் இருக்கிறது' என்று கர்த்தர் பேசியவுடன், என்னுடைய ஜெபத்தை முடித்து எழுந்த போது, எனக்குள் ஒரு பெரிய சந்தோஷமும், ஒரு நிம்மதியும் உண்டானது. அதன்பிறகு வேதத்தை நிறைய படிக்க ஆரம்பித்தேன். இதுவரைக்கும் நான் எப்படியோ வாழ்ந்திட்டேன், இனிமேல் அப்படி வாழக் கூடாது என்று இயேசுவை அறிந்து கொண்டவுடன் நாலுமாவடியைச் சுற்றி இருக்கிற எல்லா கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்தேன். சில ஆத்துமாக்களை கர்த்தருக்குள் வழிநடத்த தேவன் உதவி செய்தார். அதற்குப் பிறகு 2 வருடம் அந்தப் பைபிள் காலேஜில் வைத்து ஆவியானவர் என்னைப் பயங்கரமாக உருவாக்க ஆரம்பித்தார். 3 வருடம் முடித்து நாலுமாவடியிலேயே ஊழியம் செய்யலாம் என்று



நினைத்தேன். ஆனால் கர்த்தர், ''இது உன் இடம் கிடையாது; உன் ஊருக்குப் போ, உன்னைக் கொண்டு அங்குப் பெரிய காரியங்களைச் செய்வேன்'' என்று தெளிவாகப் பேசினார். உடனே நான் பல்லடம் சென்றேன்.

## சரி... ஒளிந்துக் கொள்ள வந்த உங்களை ஆண்டவர் உருவாக்கி உங்கள் ஊருக்கு அனுப்பினார்... அங்கு ஊழியம் செய்ய வாய்ப்புகள் எப்படி வந்தது?

ஏற்கெனவே எனது அம்மா, வீட்டில் 4 பேருடன் இணைந்து ஜெபிப்பார்கள். அவர்களை வைத்து என் அம்மாவின் துணையோடு சபை ஊழியங்களை செய்ய ஆரம்பித்தோம். ஆனால் பயங்கரமான எதிர்ப்புகள் வந்தன. எனக்கு எந்தவிதமான உதவி செய்வதற்கும் யாரும் இல்லை. நான் ஜெபித்து ஜெபித்து ஊழியம் செய்யச் செய்ய நிறைய அற்புதங்கள் நடக்க ஆரம்பித்தது. அதைபார்த்து ஆத்துமாக்கள் வர ஆரம்பித்தார்கள். ஆரம்பிக்கும்போது 4 பேராக இருந்தவர்கள், இன்றைக்கு சபையில் 100 பேர் இருக்கிறார்கள். ஒருவர் கூட ஆதி கிறிஸ்தவர்கள் கிடையாது. இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு வந்தவர்கள். இதற்காக நான் கிராமங்களில் சென்று சுவிசேஷம் அறிவித்து அவர்களைக் கர்த்தருக்குள் நடத்தி 100 பேர் கூடி ஆராதிக்க தேவன் கிருபை செய்து வருகிறார். இன்றைக்கு சொந்தமாக வீடு கட்டி, வீட்டின் 3வது மாடியில் சபை ஆராதனை நடைபெற்று வருகிறது. எந்த இடத்தில் சபை





நடத்தக் கூடாது என்று சொன்னார்களோ, அதே இடத்தில் இன்றைக்கு நாங்கள் சந்தோஷமாகச் சபை நடத்தி வருகிறோம். எந்த நண்பர்களோடு சண்டை போட்டு ஓடி ஒளிந்தேனோ, அதே நண்பர்கள் இன்றைக்கு எனக்கு உதவியாக இருந்து வருகிறார்கள்.

## உங்களுடைய திருமண வாழ்க்கைப் பற்றிச் சொல்லுங்களேன்?

எனக்கு 3 வருடதிற்கு முன்பு திருமணம் நடைபெற்றது. என் மனைவி பெயர் ஜெனிபர் சமந்தா, அவர்கள் எனக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக இருக்கிறார்கள். 3 வருடம் எங்களுக்குக் குழந்தை இல்லை. இந்த 3 வருடங்களில் நாங்கள் கேட்காத வார்த்தைகள், அவமானங்கள் இல்லை. ஆனால் கர்த்தருடைய கிருபையால் 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் தேதி அழகான பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்து



எந்த இடத்தில் வெட்கப்பட்டோமோ அதே இடத்தில் கர்த்தர் எங்கள் தலையை உயரப் பண்ணினார்.

## வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இன்றைக்கு உங்களைச் சுற்றி ஆயிரம் நண்பர்கள், உறவினர்கள் இருக்கலாம். ஆனால் நீங்கள் கர்த்தருக்கு தேவை என்பதால் தான், இந்த சத்தியத்தைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த உலகத்தில் உங்களை கீழே தள்ளுவதற்காக அநேக காரியங்கள் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஆண்டவருக்காக நீங்கள் வைராக்கியமாய் நிற்பீர்களானால் இந்த தேசத்தில் தேவன் உங்களையும் அடையாளமாக மாற்றுவார்! வாலிபனே எழும்பி பிரகாசி!

**அன்பான வாலிபர்களே! பக்தி வைராக்கியமானக் குடும்பத்தில் பிறந்து ரவுடித்தனம் செய்து ஓடி ஒளிந்து வந்த சகோதரர் கோகுல் அவர்களைத் தேவன் சந்தித்து, பாவங்களை மன்னித்துப் பாஸ்டர் கோகுல் ஜோசப்பாக மாற்ற முடியுமானால், இதேபோன்ற சூழ்நிலையில் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிற உங்களையும் மாற்ற அவரால் முடியும். ஆனால் நீங்கள் உங்கள் இருதயத்தில் இயேசுவுக்கு இடம் கொடுத்தால் தான், அவருடைய பிள்ளையாக மாற்ற அவரால் முடியும்!**

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் ஒவ்வொரு பாடல் மறைந்திருக்கிறது. அந்தப் பாடலைக் கண்டுபிடித்து, 2 வரிகளில் எழுதி அனுப்பவும்.

1) சங்கீதம் 3:3 ______________________

2) சங்கீதம் 91:10 ______________________

3) உன்னதப்பாட்டு 2:12 ______________________

4) யாத்திராகமம் 15:11 ______________________

5) சங்கீதம் 62:1, 2 ______________________

6) யோசுவா 24:15 ______________________

7) சங்கீதம் 42:1 ______________________


8) எண்ணாகமம் 21:17 ______________________

9) சங்கீதம் 91:1 ______________________

10) ஏசாயா 66:13 ______________________



பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.09.2025




கடந்த மாத வெற்றியாளர்

**ஷெரின், தக்கலை**

அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1) ஆபிரகாம் (யாக்கோபு 2:23)
2) எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் (யோபு 2:11, 13)
3) யோவான் ஸ்நானன் (யோவான் 3:29)
4) லாசரு, மரியாள், மார்த்தாள் (யோவான் 11:5)
5) [illegible] ஏரோது, பிலாத்து (லூக்கா 23:6-12)
6) ஆக்கில்லா, பிரிஸ்கில்லா (ரோமர் 16:3, 4)
7) ஊசாய் (1 இராஜா 4:5; 2 சாமு. 15:37)
8) தானியேல் (தானி. 2:48, 49)
9) தாவீது, யோனத்தான் (1 சாமு. 18:1-3)
10) கிபியோனின் குடிகள் (யோசுவா 9:1-16)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# வார்த்தையில் விசுவாசம்



இயேசு இந்த உலகத்தில் உலாவின நாட்களில் ஜனங்களுக்கு அற்புதம் செய்கிறவராக, சுகம் கொடுக்கிறவராக, விடுதலை கொடுக்கிறவராக, நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார் என்பதாக வேதத்தில் வாசிக்கிறோம். பலதரப்பட்ட மக்கள் விடுதலைக்காகச் சுகத்திற்காக இயேசுவைத் தேடி வந்தார்கள்.

**அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு மரண வேதனையால் போராடின தான் மகனின் விடுதலைக்காக ஒரு தகப்பன் இயேசுவைத் தேடி வந்தார். நீர் எங்களுக்குச் செய்யக் கூடுமானால், எங்கள்மேல் மனமிரங்கி உதவி செய்யும் என்று ஒரு ஜெபம் செய்தார். அப்பொழுது ஆண்டவர், நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்; விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் (மாற்கு 9:23) என்று சொல்லுகிறார். நம்முடைய விசுவாசம் தான் தேவனிடத்திலிருந்து அற்புதத்தைக் கொண்டு வரும்.**



## எதை விசுவாசிக்க வேண்டும்?

வேத வசனத்தை, தேவனுடைய வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டும். மத்தேயு 8:8ல் நூற்றுக்கு அதிபதி ஒருவர், இயேசுவைப் பார்த்து; என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய் கிடக்கிறான், நீர் இங்கிருந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும்; வீட்டிலிருக்கும் என் வேலைக்காரன் குணமாவான் என்று கேட்கிறான். அதற்கு இயேசு, நான் வந்து அவனைச் சுகமாக்குகிறேன் என்று சொன்னார்.



அதற்கு அவன், உம்முடைய வார்த்தையில் வல்லமை இருக்கிறது; நீர் ஒரு வார்த்தை சொன்னால் போதும், வீட்டிலிருக்கும் என் வேலைக்காரனுக்கு அற்புதம் நடக்கும் என்று சொன்னான். நூற்றுக்கதிபதிக்கு இயேசுவின் மேல் அவ்வளவு விசுவாசம் இருந்தது. அவன் விசுவாசத்தை ஆண்டவர் கனப்படுத்தினார்.

## வசனத்தின் மீது எப்படி விசுவாசம் வைத்து அற்புதத்தைப் பெற்றுக் கொள்வது?

ஒரு சகோதரர் வியாதிப்பட்டு, ''இனி இவர் பிழைப்பது கஷ்டம்'', என்று மருத்துவர்களால் கைவிடப்பட்ட நேரத்தில், அவர் ஜெபித்து, வசனத்தைத் தியானிக்கும்போது, **“நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை”** (சங்கீதம் 117:17,18) என்ற வசனம் அவர் கண்களில் பட்டது.

இந்த வசனத்தைத் தன்னுடைய காதுகள் கேட்கும்படி சத்தமாகத் திரும்பத் திரும்ப வாசிக்க வாசிக்க

அவருக்குள் விசுவாசம் பெருக ஆரம்பித்தது. இந்த வசனம் எனக்குரியது என்று அறிக்கையிட்டு துதிக்க துதிக்க அவர் சுகம் பெற்று இன்றைக்கு இயேசுவை சாட்சியாக அறிவித்து வருகிறார். வசனத்தின் மீது வைக்கிற விசுவாசத்தினால் தான் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## எனக்கு விசுவாசமே இல்லையே... எப்படி எனக்குள் இந்த விசுவாசம் வரும் என்ற கேள்வி உங்களுக்குள்ளிருக்கிறதா?

**"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"** (ரோமர் 10:17). இயேசு, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர், அவருடைய மனதுருக்கம் மாறவில்லை, அன்பு மாறவில்லை, இப்போதும் அற்புதம் செய்கிறார் என்ற விசுவாசமான வார்த்தைகளைப் பேசும்போதும், கர்த்தருடைய வசனத்தை வாசித்து, பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு தியானிக்கும்போதும், உங்களுக்குள் விசுவாசம் பெருகும். அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசும்போது அவிசுவாசம் தான் உண்டாகும்.

வேத வசனத்தைத் தவறாகப் போதிக்கும்போது சாத்தானின் வல்லமை அதில் செயல்பட்டு, உங்களுடைய விசுவாசத்தை உடைத்து அவிசுவாசத்தை உங்களுக்குள் விதைத்து விடுவான். வசனத்தை விசுவாசித்து கேட்கும்போது, ஆவியானவர் செயல்பட்டு, உங்களுக்குள் விசுவாசத்தைத் தூண்டி எழுப்புவார். வசனத்தைக் கேட்கக் கேட்க விசுவாசம் பெருகும். அற்புதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் விசுவாசம் பெருகும். இது வல்லமையும் ஜீவனும் உள்ள வார்த்தைகள். வசனத்திற்குள் ஜீவன் இருக்கிறது, அது கிரியை செய்து ஜனங்களுக்குள் விசுவாசத்தை உயிர்ப்பிக்கும்.

தென்கொரியா தேசத்தில் புத்த மதத்தைச் சார்ந்த 17 வயது வாலிபன் 2 நுரையீரலும் பாதிக்கப்பட்டு மூச்சு விட முடியாமல், மருத்துவர்களால் கைவிடப்பட்டு மரண படுக்கையில் இருக்கிறார் என்ற செய்தியை, இயேசுவை விசுவாசித்த ஒரு சிறுபெண் கேட்டு வாலிப வயதில் இந்த அண்ணன் சாகப் போகிறார்களே, என்ற பாரத்தினால், அவரை சந்தித்து ஜெபித்துவிட்டு **"இந்த வசனத்தை வாசியுங்கள்"** என்று ஒரு புதிய ஏற்பாட்டைக் கொடுத்தபோது, அவர் வேதாகமத்தை தூக்கி எறிந்து விட்டு, **"எனக்கென்று ஒரு தெய்வ நம்பிக்கை இருக்கிறது, நீ இயேசு கிறிஸ்து என்ற ஒரு புதிய கடவுளைச் சொல்ல வந்திருக்கிறாய்"** என்று சொல்லி அவளை அவமானப்படுத்தி அனுப்பி விட்டார். அந்தச் சிறுபெண் அவமானத்தோடு புதிய ஏற்பாட்டை எடுத்துக் கொண்டு சென்று விட்டாள். மறுபடியும் ஒருநாள் வந்து **"இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்"** இந்த வசனத்தை வாசியுங்கள் என்று சொல்லிக் கொடுக்கும்போது, கோபத்தோடு அந்தச் சிறுப் பெண்ணை ஓங்கி அடித்து விட்டார்.



மறுபடியும் 3வது முறை வந்தபோது, இவ்வளவு அடித்தும் அவமானப்படுத்தியும் வருகிறாளே என்று, வேத புத்தகத்தை வாங்கி கட்டிலின் ஓரத்தில் வைத்து விட்டார். சில நாட்களுக்குப் பிறகு, அந்த சிறுபெண் ஒரு புத்தகத்தைக் கொடுத்தாளே, அதில் என்ன இருக்கிறது என்று திறந்து வாசிக்க வாசிக்க அவரால் பைபிளை மூட முடியவில்லை. ''இப்படியொரு தெய்வமா இயேசு கிறிஸ்து''என்று ஆச்சரியமாக இருந்தது. வசனத்தை வாசிக்க வாசிக்க அவருக்குள் விசுவாசம் பெருக ஆரம்பித்தது. மரித்து உயிரோடு இருக்கும் இந்த இயேசு எனக்கும் சுகம் தருவார், என் வியாதியைக் குணமாக்குவார் என்ற விசுவாசம் அவருக்கு வந்தது. ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார். ஆண்டவர் ஜெபத்தைக் கேட்டு அவரைத் தொட்டு சுகமாக்கி மரணப் படுக்கையை மாற்றிய அந்த வாலிபன் தான் பிற்காலத்தில் உலகத்திலேயே பெரிய சபையை ஸ்தாபித்த **டாக்டர் பால் யாங்கி சோ** அவர்கள். அவர் சாகக் கிடந்தபோது வேதவசனம் அவருக்குள் விசுவாசத்தைக் கொண்டு வந்தது. இன்றைக்கு நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அன்றைக்கு அற்புதம் செய்த ஆண்டவர் இன்றைக்கும் அற்புதம் செய்வார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

**அன்பான வாலிபர்களே! வேத வசனத்தில் உயிர் இருக்கிறது. தினமும் வாசிக்க வாசிக்க விசுவாசம் பெருகும். உங்களுக்குள்ளிருந்து ஆவியானவர் கிரியை செய்வார். கடைசி நாட்களில் வேத வசனத்தை ஆர்வமாகப் படித்து இருதயத்தில் பதித்துக் கொள்ளுங்கள்.**

# உயிர்ப்பிக்கும் வார்த்தை!

தேவனுடைய வார்த்தை ஒரு பட்டயத்தைப் போல் நம்முடைய இருதயங்களில் ஊடுருவிச் சென்று, நம்முடைய நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுத்து வெளிப்படுத்துகிறது.




வேத வசனம் வழிநடத்தும் ஒளியாகவும் உள்ளது. **"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"** (சங்கீதம் 115:105). குழப்பமான சூழ்நிலை, வாழ்க்கையைக் குறித்து தெளிவில்லாதபோது வேதவசனம் சரியான பாதையைக் காட்டுகிறது.



வேத வசனங்களை உங்கள் இருதயத்தில் வைக்கும்போது உங்கள் மனதில் சரியான முடிவுகளை எடுக்க முடியும். தேவனுடைய வார்த்தையை உங்கள் மனதிலும், உள்ளத்திலும் பதிக்கும்போது வேத வசனம் உங்களைப் பாவ வழியில் நடக்கவிடாமல், பரிசுத்தமான வழியில் செல்ல வழிநடத்தும். நமக்கு சோதனையும் வேதனையும் வரும் வேளைகளில், வேத வசனங்கள் நம்மைத் தேற்றும். எனவே வேத வசனங்களை வாசித்தால் மட்டும் போதாது, அவற்றை நம் இருதயத்தில் பதித்து வைக்க வேண்டும். வேதவசனங்கள் நம் இருதயத்தில் ஆழமாக இருக்கும் பட்சத்தில், தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு அவ்வார்த்தைகள் நம்மைத் தடுக்கும். இதைத்தான் தாவீது தன்னுடைய அனுபவத்தில் சொல்லுகிறார், **"நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்** (சங்கீதம் 119:11). தேவனுடைய வார்த்தைகள் இருதயத்தில் இருக்கும்போது நாம் பாவத்தில் விழாமல் இருக்க முடியும்.

பாவத்தில் கட்டப்பட்ட ஜனங்கள் விடுதலை அடைய வேண்டுமானால், கர்த்தருடைய வார்த்தை ஜனங்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும். அப்பொழுது கட்டப்பட்ட ஜனங்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாக



மனந்திரும்புவார்கள்.

பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் சில நாட்கள் தங்கி இருந்து ஆற்றினருகே வழக்கமாக ஜெபிக்கின்ற இடத்தில் உட்கார்ந்திருந்து, அங்கே கூடிவந்த பெண்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுது தியத்தீரா என்ற ஊரைச் சேர்ந்த லீதியாள் என்ற பெண்ணும் அங்கே இருந்தாள். பவுல் சொன்ன தேவனுடைய வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கும்போது கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார். அப்போது அவள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டது மட்டுமின்றி தன் வீட்டாருடன் ஞானஸ்நானம் பெற்றாள் (அப். 16:15). ஆலயமில்லாத பிலிப்பி பட்டணத்தில் லீதியாளின் வீடு சபை கூடுமிடமாக மாறியது. இப்படியாக வேத வசனமானது பாவத்திற்கு மரித்துப் போயிருந்த அவர்களுடைய வாழ்க்கையை உயிர்ப்பித்தது.

இதற்குப் பின்பு பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டபோதும் சோர்ந்து போகாமல் தேவனைத் துதித்துப் பாடினார்கள். அப்பொழுது அஸ்திபாரங்கள் அசைந்து, சிறைச்சாலைக் கதவுகள் திறவுண்டது. இதை அறிந்த சிறைச்சாலை தலைவன் பட்டயத்தை உருவி தன்னைக் கொலை செய்து கொள்ள போனபோது, பவுலும் சீலாவும் சத்தமிட்டு **"நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்"** (அப். 16:28).

பின்பு அவர்கள் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். வசனத்தைக் கேட்டவர்கள் யாவரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்தானம் எடுத்தார்கள். இதேபோல் வேதவசனம் ஜனங்களைப் பாவத்தை விட்டு மனம் திரும்ப செய்கிறது. எனவே, கடைசி நாட்களில் வரும் வசன பஞ்ச காலத்தில் கர்த்தருடைய வார்த்தை நம் உள்ளத்தில் இருக்கும்போது, வேத வசனங்களை தைரியமாக ஜனங்களுக்கு அறிவிக்க முடியும்.

பிசாசானவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சோதிப்பதற்கு வந்தபோது, அவர் தன்னுடைய உள்ளத்தில் இருந்த வேத வசனங்களைக் கொண்டே சாத்தானை ஜெயித்தார். உள்ளத்தில் பதிக்கப்பட்ட கர்த்தருடைய வசனம் நம்மை உயிர்ப்பிக்கும். எனவே வேத வசனங்களை உள்ளத்தில் ஆழமாகப் பதித்து வைத்துக் கொள்ளுங்கள்.



எனக்கன்பான வாலிபர்களே! வேத வசனமானது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போன்றது. சோதனை நாட்களில் உங்களைத் தப்புவிப்பதும் உயிர்ப்பிப்பதும் வேத வசனமே அல்லாமல், வேறு ஒன்றும் இல்லை. "என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து" (நீதி.7:1) என்ற வசனத்தின் படி கர்த்தருடைய வார்த்தையை இருதயத்தில் பத்திரப்படுத்துங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை அனல்மூண்டு எழும்ப செய்வார். நீங்கள் இயேசுவைப் போல வசனத்தில் நிலைத்திருக்கும்போது, சாத்தானையும் அவன் தந்திரங்களையும் மேற்கொண்டு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும்!




# மீண்டும் துளிர்த்த அத்திமரம்


அன்பு நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! மீண்டும் துளிர்த்த அத்திமரம் என்ற வேதாகம சரித்திரத்தின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம்.

நண்பர்களே, கடந்த மாதத்தில் இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணின காரியங்களைக் குறித்து அறிந்து கொண்டோம். இந்த மாதத்தில் இஸ்ரவேல், அதாவது மீண்டும் துளிர்த்த அத்தி மரத்திற்கும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கும் உள்ள தொடர்பைக் குறித்து அறிந்து கொள்ளப் போகிறோம்.

நண்பர்களே, நீங்கள் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தைக் குறித்து நன்கு அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். கர்த்தர் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தை ஸ்தாபித்து 46 வருடங்களாக நடத்திக் கொண்டு வருகிறார். கடந்த 20 வருடங்களாக, இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் வருடந்தோறும் 50 பேர் கொண்ட குழுவாக இஸ்ரவேல் தேசத்திற்கு சுற்றுலா சென்று வருகிறோம். இதில் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தோடு மிகவும் ஐக்கியப்பட்ட குடும்பங்கள் செல்வது வழக்கம். இப்படி செல்லும்போதெல்லாம் கெத்செமனே தோட்டத்தில் தனியாகவும் குழுவாகவும் ஜெபிப்பது வழக்கம்.

2015ம் ஆம் ஆண்டு இஸ்ரவேல் தேசத்திற்கு சுற்றுலா சென்றபோது, நமது அன்பு சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள், இஸ்ரேல் தேசத்தில் உள்ள கெத்செமனே தோட்டத்தில் இஸ்ரவேலின்







சமாதானத்திற்காக ஜெபித்தபோது கர்த்தர் இடைப்பட்டு ''இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு வராமல் சமாதானம் எப்படி உண்டாகும்'' என்று பிரத்யட்சமாய் பேசினார். ''இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்'' என்ற வேத வசனத்தைத் தேவன் சுட்டிக் காண்பித்து 'இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படுவார்கள்' என்றும், 'இஸ்ரவேல் தேசத்தில் எழுப்புதல் அக்கினி ஊற்றப்படும்' என்றும் தேவன் வாக்குப் பண்ணினார்.

உன் தேசத்தின் (இந்தியா) எழுப்புதலுக்காகவும், என் தேசத்தின் (இஸ்ரேல்) எழுப்புதலுக்காகவும் நீ பிரயாசப்பட வேண்டும் என்ற கர்த்தருடைய கட்டளையின்படி இஸ்ரவேல் எழுப்புதல் ஜெப சுற்றுலா என்ற தரிசனம் உருவானது. 2016ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இஸ்ரவேல் எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் 400க்கும் அதிகமான தேவப் பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். இந்தச் சுற்றுலாவில் ஒருநாள் எருசலேமில் வைத்து 12 மணி நேரம் ஜெபம் நடத்தப்பட்டது.

**இஸ்ரேல் தேசத்தின் புள்ளி விபரங்கள்!**

| | |
|---|---|
| இஸ்ரேல் மக்கள் தொகை | 98 லட்சம் |
| தலைநகரம் | எருசலேம் |
| மக்கள் இனம் | யூதர்கள், அரபியர்கள், ட்ரூஸ், ஆர்மேனியர்கள் |
| யூதர்கள் | சுமார் 71 லட்சம் |
| யூதரல்லாதோர் (அரேபியர்கள், கிறிஸ்தவர்கள், ட்ரூஸ், பிற மதத்தினர்) | சுமார் 25 லட்சம் |
| பேசும் மொழி | எபிரேயம், அரபு, ஆங்கிலம், ரஷ்யம், பிரெஞ்சு |
| பண மதிப்பு | ஷேக்கல் |
| மாவட்டங்கள் | 6 +1 |

மேலும் கலிலேய கடல், கர்மேல் பர்வதம், கெத்செமனே தோட்டம், இயேசு உயிர்த்தெழுந்த கல்லறை தோட்டம், சிதேக்கியா குகை இப்படி முக்கிய இடங்களில் 2 மணி நேரம் ஜெபங்கள் நடத்தப்பட்டது. குறிப்பாக எருசலேமில் நடைபெற்ற 12 மணி நேர ஜெபத்தில் இஸ்ரவேலை குறித்த தேவத்திட்டத்தையும் தேவன் வைத்திருக்கிற தரிசனங்களையும் நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களும் சகோதரர் வின்சென்ட் செல்வகுமார் அவர்களும் வேத வசனத்தின்படி விளக்கிக் கூறி ஜெபங்களை நடத்தினார்கள். வந்திருந்த ஜனங்கள் இஸ்ரவேலைக் குறித்த பாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இஸ்ரவேலுக்காக ஜெபிக்கிறவர்களாக மாறினார்கள்.

இதேபோல் 2017, 2018, 2019, 2023 ஆகிய வருடங்களில் எழுப்புதல் ஜெப சுற்றுலா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஜனங்கள் இஸ்ரவேலுக்காக ஜெபிக்கவும் செயல்படவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அதேபோல் 2017, 2018, 2019, 2022, 2024 – **MAY & Nov** இந்த வருடங்களில் இஸ்ரவேல் தேச எழுப்புதல் உபவாச ஜெபநடை நடைபெற்றது. இதில் ஏழு நாட்களும் உபவாசித்து இஸ்ரவேலுக்காக ஜெபித்தார்கள். இதன் விளைவாக இஸ்ரவேலில் திரளான மாற்றங்களைக் கர்த்தர் கட்டளையிட்டார். இஸ்ரவேலில் திரளான யூதர்கள் இயேசுவை அறிந்து கொண்டார்கள். இஸ்ரவேலர் மத்தியில் ஊழியம் செய்கிற ஊழியர்கள் பெருகினார்கள். இஸ்ரவேலில் சபைகள் வளர்ந்து பெருகி கொண்டிருக்கின்றன. 800க்கும் அதிகமான ஜெபக்குழுக்களை தேவன் எழுப்பியுள்ளார். இஸ்ரவேலரின் இரட்சிப்புக்காகவும், எழுப்புதலுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும், 10 நாடுகளில் உள்ள தேவப் பிள்ளைகள் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீண்டும் துளிர்த்த அத்தி மரத்தில் மீண்டும் ஒரு எழுப்புதல் அக்கினி ஊற்றப்பட வேண்டும். ''பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்'' (லூக்கா 12:49) என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும். அப்போஸ்தலர் காலத்தில் பெந்தேகொஸ்தே என்னும் நாளில் எழுப்புதல் அக்கினி ஊற்றப்பட்டது. இந்த அக்கினி இஸ்ரவேலில் மீண்டும் ஊற்றப்பட வேண்டும் என்று ஜெபிக்க கர்த்தர் உங்களை அழைக்கிறார். நீங்கள் விரும்பினால் எங்களோடு இணைந்து ஜெபிக்கலாம். உங்களுக்கு நாங்கள் மாதம் தோறும் இஸ்ரவேலுக்காக ஜெபிக்கிற ஜெபக் குறிப்புகளை அனுப்பி வைப்போம். நீங்கள் தனியாகவோ, குழுவாகவோ, குடும்பமாகவோ, சபையாகவோ இணைந்து இஸ்ரவேலுக்காக ஜெபிக்கலாம். கர்த்தர் அவருடைய சித்தத்தை இஸ்ரவேலிலே நிறைவேற்றுவாராக.



# நான் ஒரு ஜெப வீரன்

*என் அன்பு தம்பி தங்கச்சி,*

*இந்த ஆண்டு ஆரம்பம் முதல் நாம் பலவிதமான ஜெபங்களைக் குறித்துப் பார்த்து வருகிறோம். இந்த மாதம் ஆதி சபை மக்கள் பேதுருவுக்காகச் செய்த ஒரு வித்தியாசமான ஜெபத்தைப் பற்றித் தான் பார்க்கிறோம்.*

## ஊக்கமான ஜெபம்

இந்த ஜெபம், நாம் கேட்பது கிடைக்கும்வரை ஜெபிக்கும் ஜெபம் அல்ல; நமக்கு வேண்டியதைப் பலவந்தமாகப் பெறச் செய்கின்ற நீண்ட ஜெபமும் அல்ல. கர்த்தருடைய இருதயத்தோடு நமது இருதயமும் ஒன்றிணைந்து, ஆவிக்குள்ளாகி ஜெபிக்கும் ஊக்கமான விசுவாச ஜெபமாகும். நாம் எதற்காக எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருந்து ஜெபிப்பார். இது ஜெபத்தில் தீவிரமாகவும், விடாப்பிடியாகவும், தொடர்ந்து தேவனிடம் ஜெபம் செய்வதைக் குறிக்கிறது.



பேதுருவுக்காகச் சபையார் செய்த ஊக்கமான ஜெபத்தைக் குறித்து அப்போஸ்தலர் 12-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பேதுரு சபையில் முக்கிய நபராக இருந்ததால், ஏரோது அவனைச் சிறையில் அடைத்தான். பேதுரு சிறையில் இருந்தபோது, அவரை விடுவிக்கச் சபையார் அவனுக்காக இடைவிடாமல் ஊக்கமாக ஜெபித்தார்கள். இது அவர்களின் விசுவாசத்தையும், பேதுருவின் மீது அவர்கள் வைத்திருந்த அன்பையும் வெளிப்படுத்தியது.



பேதுரு சங்கிலியினால் கட்டப்பட்டவராய் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். தனக்கு உடனடியாக விடுதலை கிடைக்க இருப்பது அவருக்குத் தெரியாது. அதனால் தான், தன் பாதரட்சையைக் கழற்றிப்போட்டு மேல் போர்வையையும் தளர்த்தினவராய் தூங்குகிறார். ஆனால், திடீரென அங்கே தூதன் ஒருவன் தோன்றி, பேதுருவைத் தட்டியெழுப்பி, ''அரையைக் கட்டு, பாதரட்சையைப் போடு, போர்வையைப் போர்த்திக் கொண்டு என்



பின்னே வா'' என்று அழைக்கிறார். பேதுரு எழுந்து சென்றாலும், இது உண்மையாக நடக்கிறது என்பதை அறியாதவராகத்தான் ஏதோ தரிசனம் காண்பதாக எண்ணி தூதனை பின்தொடர்கிறார். காரணம், இது சாதாரணமாக நடக்கக்கூடிய ஒன்றல்ல. அவரைப் பிடித்துக் காவல் காக்கும்படிக்கு வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகரை ஏற்படுத்தியிருந்தார்கள்.

## இப்படிப்பட்டதான சூழ்நிலையில் பேதுரு வெளியேறுவது எப்படிச் சாத்தியம்?

ஆனால், சபையாரோ பேதுருவுக்காக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். ஜெபத்துக்கு அத்தனை வல்லமையுண்டு. பேதுரு வெளியே கொண்டு வரப்படும் நாளுக்கு முந்தின நாள், தேவனுடைய தூதன் பேதுருவை வெளியில் கொண்டுவந்தார். கர்த்தர் தன்னை வெளியில் கொண்டு வந்தார் என்பதை உணர்ந்த பேதுரு, வீட்டுக்கு வந்து பார்க்கும்போது, அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்ததைக் கண்டார். அவர்களின் ஜெபம் தேவசந்நிதியில் எட்டியபோது கர்த்தர் பேதுருவை விடுதலையாக்கினார்.

பேதுரு சிறையில் அடைக்கப்பட்டபோது, சபை மக்கள் ஏரோது இராஜாவிடமோ, சிறைக் காவலனிடமோ, அதிகாரிகளிடமோ, பேதுருவுக்கு எதிராக முறையிட்டவர்களிடமோ சென்று மன்றாட வில்லை. அவர்கள் கர்த்தரை நோக்கி ஊக்கமாக ஜெபித்தார்கள். நீதிமானின் ஜெபத்தைக் கர்த்தர் உதாசீனம் செய்யமாட்டார்; ஊக்கமான ஜெபங்களைக் கர்த்தர் தள்ளவும் மாட்டார். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக். 5:16) என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தர் சபை மக்களின் ஊக்கமான ஜெபத்துக்குப் பதில் கொடுத்து, தம்முடைய தூதனை அனுப்பி பேதுருவை சிறையிலிருந்து அற்புதமாக விடுவித்தார்.

தானியேலுடைய வாழ்க்கையிலும் இப்படியே நடந்தது. தானியேல் 6:16-ல் அவர் ஜெபத்தில் ஊக்கமாய் தரித்திருந்ததைக் காணலாம். சிங்கங்களின் வாய்க்குத் தானியேலைத் தப்புவித்த தேவன், தாம் ஒருவரே ஜீவனுள்ள தெய்வம் என்று இராஜா பறைசாற்றும்படி செய்தார். தானியேலின் தேவனே தேவன் என்று சொல்லும் அளவிற்கு அந்த அற்புதம் நடைபெற்றது.

இப்படி பிரச்சனைகளைக் கண்டும், உபத்திரவங்களை அனுபவித்தும் ஜெபத்தில் குறையுள்ளவர்களாக இல்லாமல், ஊக்கமாக ஜெபித்தவர்கள் ஜெயம் பெற்றார்கள். இவர்களை உபத்திரவத்திற்கு தள்ளின சத்துருக்களை தேவன் தலைகவிழ்ந்து ஓடச்செய்தார் (அப். 12:22,23, அப். 16:28,39, தானி. 6:24).

இன்றைக்கு நாம் எத்தனை பிரச்சனைகளைச் சந்தித்தாலும் பயப்பட வேண்டாம். நம்முடைய ஜெபம் வீண் போகாது. தேவனை நோக்கி இடைவிடாமல் ஊக்கமாக ஜெபிப்போம். நம்முடைய சிறையிருப்பையும் தேவன் மாற்றுவார்!


இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
காலை 7 மணிக்கு
YouTube மற்றும் Comforter TVயிலும் பார்க்கலாம்.

9750955547

LIVE STREAMING
Revival
IGNITERS
SUNDAY 28th SEP.
Time: 3:00 PM - 5:00 pm
IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

# மவுண்ட் சீனாய்

**வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை!**

தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா, பாண்டிச்சேரி,
கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில்
35 இடங்களில் நடைபெற இருக்கிறது.

அக்டோபர் 20 2025
திங்கள் கிழமை
(தீபாவளி தினத்தன்று)

**நேரம்:**
காலை 9 மணிமுதல்
மாலை 4 மணிவரை

## சென்னை மண்டலம்

### வேலூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
அஜந்தா மஹால் காம்ப்ளக்ஸ்
முதல் மாடி, எண்.3, வேலூ மேற்கு
குறுக்கு சாலை காந்தி நகர்
(விருதம்பேட் பெட்ரோல் பேங்க்
எதிர்புறம்)

**சகோ. பொற்செல்வன் ஆசீர்**

தொடர்புக்கு: 94429 79556

### சென்னையில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
பிரின்ஸ் குஷால் டவர்ஸ்
7வது மாடி, B-Wing
Adjacent to LIC Metro,
மவுண்ட் ரோடு.

**சகோ. GPS ராபின்சன்**

தொடர்புக்கு : 94884 75315

### திருவள்ளூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
HSR டவர், 2வது மாடி
வில்லியம் கொடி சாலை
சி.எஸ்.ஐ. கொடி நினைவு
சர்ச் அருகில்

**சகோ. நல்லதம்பி சார்லஸ்**

தொடர்புக்கு: 70105 86464

### செங்கல்பட்டில்...
டிரினிட்டி ஹால்
திருக்கழுக்குன்றம் மெயின் ரோடு
திருப்போரூர் கூட் ரோடு அருகில்
நெம்மேலி.

**பாஸ்டர் சரவணன்**

தொடர்புக்கு:
95975 88831 | 97108 09626

### இராணிப்பேட்டில்...
உலக எழுப்புதல்
ஜெப மையம் 96/12,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு
சீயோன் நகர், ஸ்கடர் மெமோரியல்
மருத்துவமனை அருகில்

**சகோ. ஜெஹவின் வெஸ்லி**

தொடர்புக்கு: 95002 83179

### பேர்ணாம்பட்டில்...
எழுப்புதல்
ஜெப கூடாரம்,
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி. கோட்டா ரோடு.

**சகோ. அருண் பீட்டர்**

தொடர்புக்கு: 99408 54125

### ஆம்பூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
முதல் மாடி, ரெஹோபோத் காம்ப்ளக்ஸ்
பெதஸ்தா மருத்துவமனை சந்து
ஆம்பூர், திருப்பத்தூர்

**சகோ. விஜயகுமார்**

தொடர்புக்கு: 95979 27799

### காஞ்சிபுரத்தில்...
இடம்
பின்னர்
அறிவிக்கப்படும்

**சகோ. ஜெயசிங்**

தொடர்புக்கு: 94884 75315

## சேலம் மண்டலம்

### நாமக்கல்லில்...

நாமக்கல் நகராட்சி மண்டபம்,
சிட்டி யூனியன் வங்கி எதிரில்,
துறையூர் சாலை,
நாமக்கல் பேருந்து நிலையம்
பின்புறம்

**சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு : 99620 85523
94893 01237 I 94886 18305

### சேலத்தில்...

YMCA,
123 பிரட்ஸ் ரோடு,
சேலம்

**சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு: 99620 85523
95977 54972 I 83000 19710

## ஆந்திரா மண்டலம்

### சித்தூரில்...

St Luke's
Telugu church,
Parish hall
B.T compound,

**சகோ. சாம் மோசஸ்**

தொடர்புக்கு:
99620 85523 I 85001 28041

### புத்தூரில்...

Good Shepherd Ashram,
Church Compound,
Puttur, திருப்பதி மாவட்டம்

**சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு :
99620 85523 I 94889 38305

## திருநெல்வேலி மண்டலம்

### ஜெபமலையில்...

கீழ மாதாபுரம்,
ஜெபமலை

**சகோதரி**
**ஆஸ்லி எபனேசர்**

தொடர்புக்கு:
830013 1000 I 97509 55548

### கோவில்பட்டியில்...

செயின்ட் பால்ஸ்
மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவில்பட்டி

**கவி. சாம் பிரசாத்**

தொடர்புக்கு:
96778 58766 I 97873 22334

### நாலுமாவடியில்...

தேவனுடைய
கூடாரம்,
மோசஸ் அரங்கம்

**சகோ. அகஸ்டின்**
**இராஜசேகர்**

தொடர்புக்கு:
04639 - 353535 I 97509 55547

### சங்கரன்கோவிலில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்
ஷக்கினா ஹால்,காங்கிரஸ்
பொன்விழா மைதானம் பின்புறம்
முல்லை நகர்,
இராஜபாளையம் ரோடு

**சகோ. ஆபிரகாம்**

தொடர்புக்கு:
83449 49555 I 97509 55548

### திருநெல்வேலியில்...

சாரா டக்கர்
பெண்கள்
மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை,

**பாஸ்டர்**
**இராபர்ட் ரொனால்ட்**

தொடர்புக்கு: 97509 55548

## திருச்சி மண்டலம்

### திருச்சியில்...

YMCA Hall,
Opp. To G.H., Puthur,

**சகோ. ஆஸ்பார்ன் சாம்**

தொடர்புக்கு : 94897 76075

## மதுரை மண்டலம் :

### தேனியில்...

தாவீதின் கூடாரம்
ஆராதனை மையம்
J D N காம்ப்ளக்ஸ்,
வைகை அணை ரோடு,
பெரியகுளம்,

**சகோ. ஜெபஸ்டின்**

தொடர்புக்கு:
99787 66422 I 97509 55548

### மதுரையில்...

ஏலிம் AG சபை
கூடல் நகர்

**சகோதரி செல்வராணி**
**அப்பாதுரை**

தொடர்புக்கு :

### இராமநாதபுரத்தில்...

வலம்புரி மஹால்
பழைய பேருந்து நிலையம்
அருகில்,
இரயில்வே பீடர் ரோடு

**சகோ. ரூபன்**

தொடர்புக்கு :
89256 68730 I 97509 55548

### சிவகங்கையில்...

KSM
திருமண மண்டபம்
(கலைஞர் மாளிகை)
திருப்பத்தூர் ரோடு,

**சகோ.**
**வில்லியம் பெஞ்சமின்**

தொடர்புக்கு: 80122 11022
94868 94442 I 97509 55548

### திண்டுக்கல்லில்...

இடம்
பின்னர்
அறிவிக்கப்படும்

**சகோ. பாஸ்டர்**
**சாமுவேல் ஜெபராஜ்**

தொடர்புக்கு : 63823 92446
93447 55308 I 90434 22812

## கோவை மண்டலம்

### திருப்பூரில்...
TELC அருள்நாதர் ஆலயம்,
சபாபதிபுரம்

**சகோ. கார்த்தி கமாலியேல்**

தொடர்புக்கு:
99443 60222 | 97897 31768

### கோவையில்...
இடம்
பின்னர்
அறிவிக்கப்படும்

**சகோ. டேவிட் கணேசன்**

தொடர்புக்கு :
989439 9599 | 94884 75315

### ஈரோட்டில்...
CSI பிரப் சர்ச்,
பிரப் ரோடு

**சகோ. அந்தோணி தாஸ்**

தொடர்புக்கு : 97507 22000

### பொள்ளாச்சியில்...
இராஜாதி இராஜா
தேவ சபை ஊழியங்கள்
ஆளேஸ்வரன்பட்டி

**சகோ. இராஜேந்திரன்(தேனி)**

தொடர்புக்கு : 94878 56205

### காங்கேயத்தில்...
இடம்
பின்னர்
அறிவிக்கப்படும்

**சகோதரி அனிதா பானு**
**சகோதரி வசந்தி பால்**

தொடர்புக்கு :
9788298943 | 9488475315

### உடுமலைப்பேட்டையில்...
இடம்
பின்னர்
அறிவிக்கப்படும்

**சகோ. சதீஷ் (கோவை)**

தொடர்புக்கு:
98778 58766 | 97873 22334

### கர்நாடகா மாநிலம் - பெங்களூரில்...
World revival prayer centre,
67/2, thomasappa layout
(opp ) Lumbini.Garden Bus Stand
Outer Ring Road,
Veerannapalaya (Nagavara).

**சகோ. குருஸ் மாசிலாமணி**

தொடர்புக்கு:
99620 85523 | 78990 88538

### கேரளா மாநிலம் - திருவனந்தபுரத்தில்...
Love Army Crusade Centre,
Parasuvakkal,
Trivandrum

**சகோ. நவீன் சாம்**

தொடர்புக்கு :
99620 85523 | 92497 18266

## கடலூர் மண்டலம்

### பாண்டிச்சேரியில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
2, கொட்டுப்பாளையம் ECR ரோடு,
(Tea time அருகில்)
லாஸ்பேட்டை
லேனா ஸ்கூல் எதிரில்

**சகோ. காலேப்**

தொடர்புக்கு:
83444 33800

### திண்டிவனத்தில்...
ஆதி லட்சுமி திருமண மண்டபம்,
மரக்காணம் ரோடு
இந்திரா நகர், திண்டிவனம்.

**சகோ. ஆஸ்பர்ன் சந்தோஷ்**

தொடர்புக்கு:
9677858766 | 9787322334

### திருவாரூரில்...
உலக எழுப்புதல் ஜெப மையம்
6/229/3 டி. டி. பி மெயின் ரோடு
என்.ஏ ஜைஸ்மில் காம்ப்ளக்ஸ்
புலிவலம்

**சகோ. சம்பத்**

தொடர்புக்கு:
9976766322 / 7373374733



### மகாராஷ்டிரா மாநிலம் - மும்பையில்
அக்டோபர் 21
செவ்வாய்கிழமை

Morning Star School, Ashok Mill Compound
Sion Bandra link Road,Opp.
Saheel Hotel, Dharavi

**சகோ. தினகர்(பேர்ணாம்பட்)**

தொடர்புக்கு: 9004882470 | 8082410410

# சபை வாலிபர்கள்

## அன்று: தீவிர செயல் வீரர்கள் 🔥
## இன்று: திசைக்கெட்டு திரியவர்கள்




Disclaimer: இந்தக் கட்டுரையை வாசிக்கும் நீங்கள் நிச்சயமாக அந்தத் திசைக்கெட்ட வரிசையில் இல்லை என்பதை முதலில் தெளிவுபடுத்துகிறோம்! 😄 இது யாரையும் குறை கூறும் நோக்கமற்றது. ஆனால் உண்மையை நமக்குள் உரைக்கும் முயற்சிதான்

📖 புதிய உடன்படிக்கையின் சபையில், தீமோத்தேயு, மாற்கு, ஸ்தேவான், பவுல் போன்ற இளைஞர்கள் தேவனுக்காக உடனடியாக எழுந்து, தீவிரமாய் செயல்பட்டதை காண்கிறோம்.







🤔 ஆனால் இக்கால சபையிலே வளரும் பிள்ளைகள், Sunday Class வரை பெற்றோருடன் ஒழுங்காகச் சபைக்கு வருகிறார்கள்.

ஆனால் ***வாலிப வயதை அடைந்ததும்*** —

- ஒரு குழப்பம்.
- ஒரு திசைமீறல்.
- ஒரு பயணத்தைத் தொடங்குகிறார்கள் — ஆனால் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்று அவர்களுக்கே தெரியாது! 😓

**வாலிபர்களின் மிகப்பெரிய சிக்கல்** 🤯

இன்றைய வாலிபர் சமுதாயத்தில் பெரிய சிக்கல் என்னவென்றால்:
"நான் யார்?" என்ற கேள்விக்கும், பதிலுக்கும் இடையில் இருக்கும் ஒரு பெரும் இடைவெளி.
💪தங்களுடைய வல்லமை என்ன என்பதை உணர்வதில்லை
🔍தங்களை யாரென அறிந்துகொள்ள முயல்கிறார்கள்... ஆனால் தவறான இடங்களில்
🧠 வாலிப வயதில், சிருஷ்டிகரை நினைக்க வேண்டும் (பிரசங்கி 12:1).
நம்மை உருவாக்கியவர் என்ன விரும்புகிறார் என்பதை சிந்திக்க வேண்டும்.

**இன்றைய குழப்பங்கள்** 🥴

இன்றைய இளைஞர் மனதில் பாலினம், பாலுணர்வு பற்றிய அநேக கேள்விகள்: ஆணா, பெண்ணா? ஓரினச்சேர்க்கையாளரா? அல்லவா?

🎞️📱🎮 சினிமா, செயலிகள், சமூக ஊடகங்கள் - அனைத்தும் இளைஞர்களைத் திசைக்கெட்ட அலைகளில் இழுத்துச்செல்லும் முயற்சியில் இருக்கின்றன.

ஆனால் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று சொல்வதற்கு இயேசு ஒருவர் மாத்திரமே உண்டு🙌
🛐 நீங்கள் யார் என்பதை உங்களைவிட நன்றாக அறிந்திருக்கிறவர் இயேசு.

அதனால், உனது நிறை குறையை இயேசுவிடம் கேட்டறி! 🙇‍♀️🙇‍♂️
📖 சங்கீதம் 127:4
"வாலவயதின் குமாரர் பலவான் கையில் உள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்." 🏹 நீங்கள் தேவனுடைய கையில் இருக்கின்ற ஒரு அம்பு - நோக்கமுடனும், திறமையுடனும், வல்லமையுடனும்!

அன்புடன் ஜெபிக்க அழைக்கிறோம்🤝
🙏 உங்கள் சபையில், உங்கள் சுற்றத்திலும் இந்தத் திசைக்கெட்ட நிலையில் யாரேனும் இருந்தால், அவர்களுக்காக ஜெபியுங்கள்.


நீங்கள், உங்கள் வாழ்க்கையில் வழிகாட்டியாக நின்று, ஒரு "நிறைவான யார்" என்பதை உணர்த்தும் ஜீவனாக இருக்கலாம்.

🔥 ***வாருங்கள்! வாலிப வீரர்களாக எழும்புவோம் – நாளை இல்லை, இன்று!***




# கனவின் வேகம்

அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!
இந்த உலகத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நிமிடமும் நாம் சாதிக்க தரப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்கள் ஆகும். சிலர் கொடுக்கப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வெற்றி பெறுகிறார்கள். அப்படி தன் கடுமையான வாழ்க்கையை வெற்றியாக மாற்றிச் சாதனையாளராக மாறியவரின் வாழ்க்கை உங்கள் முன்...



லூயிஸ் ஹாமில்டன் (**Lewis Hamilton**) இங்கிலாந்தில் ஒரு சாதாரண தொழிலாளிக் குடும்பத்தில் பிறந்தார். லூயிஸ் தன்னுடைய சிறுவயதில் **Karting** பந்தயங்களில் மிகுந்த ஆர்வம் காட்டினார். தன்னுடைய மகனின் கனவுக்காக லூயிசின் தந்தை மூன்று வேலைகளைச் செய்தார். லூயிஸ் தன்னுடைய 8வது வயதில் **Kart** பந்தயத்தில் வெற்றிப் பெற்றார். இதன்பிறகு அவருடைய வாழ்க்கை மாறத் தொடங்கியது. தன்னுடைய 13வது வயதில் **MCLaren Mercedes** நிறுவனம் அவரை வளர்ப்பு ஓட்டுநராகத் தேர்ந்தெடுத்தது. இந்தத் தருணமே, அவரை **F1** உலகத்தை நோக்கிச் செல்ல உந்தியது. லூயிஸ் தன்னுடைய பள்ளி மற்றும் பந்தய உலகத்தில் இனவெறி, தூற்றல், எதிர்ப்புகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு தனது கனவுகளுக்காக ஓடத் தொடங்கினார். ஒரு கருப்பினத்தவர் என்பதால், பல இடங்களில் அவமதிக்கப்பட்டார். என்ன அவமானத்தைச் சந்தித்தாலும் மனதில் நம்பிக்கையை மட்டும் தொலைக்காமல்

''நான் சாதித்தேன்'' என்று உறுதியோடு பந்தயத்திலும், தன்னுடைய வாழ்க்கையிலும் முன்னேறத் தொடங்கினார்.



தனது திறமை மற்றும் கடுமையான உழைப்பின் மூலமாக லூயிஸ் ஏழு முறை உலக சாம்பியன் பட்டம் வென்றார். மற்றும் **103+** பந்தய வெற்றிகள், **Sir** என்ற பட்டமும் பெற்றார். லூயிஸ் வெறும் கார் வீரராக மட்டுமல்லாமல், சமூக நீதி, சுற்றுச்சூழல் மற்றும் இன சமத்துவம் போன்ற பிரச்சனைகளுக்காகக் குரல் கொடுத்தும் வருகிறார். பலரும் ஒரு கருப்பு இளைஞன் **F1**ல் வெற்றி பெற முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய தைரியம், மனஉறுதி, தந்தையின் துணை மற்றும் கடுமையான உழைப்பு இவரை வெற்றியின் பாதையில் கொண்டு சென்றது.

இதை வாசிக்கும் நண்பர்களே! எவ்வளவு சவால்கள் வந்தாலும், நீங்கள் நின்றால் தான் தோல்வி; நீங்கள் ஓடிக்கொண்டே இருந்தால் வெற்றி உங்கள் பின்னால் வரும். தொடர்ந்து ஓடுங்கள்! உங்களையும் வெற்றி தொடர்ந்து வரும். லூயிஸ் ஹாமில்டன் வாழ்க்கைப் போல...



## ஜார்ஜ் முல்லரும்... வேதவசனமும்...

1805ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் நாள் ஜெர்மனியில் பிறந்த ஜார்ஜ் முல்லர், தனது 22ஆம் வயதில் ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்து, 1829ல் லண்டன் வந்து, இறையியல் கற்கும் மாணவருக்கு ஒரு ஜெபக்குழுவும், யூத குழந்தைகளுக்கு ஒரு வேதபாட வகுப்பும் நடத்த முற்பட்டு 50 குழந்தைகளை வைத்து ஆரம்பித்தார். **இவர் முழு வேதாகமத்தையும் 200க்கும் மேற்பட்ட முறை படித்ததோடு 100 முறை முழங்காலிலிருந்தே படித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.** ஜார்ஜ் முல்லர் எப்பொழுதும் திறந்த வேதாகமத்தோடு தான் ஜெபிப்பார். தன்னுடைய விண்ணப்பங்களைத் தேவனுடைய வார்த்தையோடு இணைத்து ஜெபிப்பார். தேவனுடைய வார்த்தை இல்லாமல் வாயைத் திறந்து ஜெபித்ததேயில்லை என்று அவரது ஜெபத்தைக் குறித்து அவர் நண்பர்கள் கூறினார்கள். முல்லர் தேவனிடம் ஜெபிக்கும் முன்பு நன்கு வேதத்தை வாசித்த பின்னரே ஜெபிப்பார். வேதத்தை வாசிக்காமல் ஜெபித்ததே கிடையாது.

50,000க்கு மேற்பட்ட அவரது ஜெபங்கள், முழங்காலை விட்டு எழும்முன் பதில் கிடைத்திருக்கிறது. பதில் வராத ஜெபம் ஒன்றுகூட இருந்ததில்லை என்று முல்லர் தனது 93ஆம் வயதில் கூறினார். இதற்கான இரகசியத்தை அவர் ஆணித்தரமாக விளக்கும்போது, "தேவனுடைய வார்த்தையை ஜெபத்தில் பயன்படுத்தி ஜெபிக்கும்போது, நிச்சயமாய் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும்" என்கிறார்.


அவர் நடத்தி வந்த காப்பகங்களிலிருந்து 2813 அனாதையர் விசுவாசிகளாக மாறினர். இவரது பல வேறுபட்ட நிறுவனங்களில் 1,21,683 மாணவ, மாணவியர் கர்த்தரண்டை வழிநடத்தப்பட்டனர். நீங்கள் என் நாமத்தினிமித்தம் எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன் (யோவான் 14:14) என்ற வசனத்தின்படி முல்லர் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் அதிகமாகவே கேட்டுப் பெற்றுக் கொண்டார். விசுவாச வீரனாகிய முல்லர் 1898, மார்ச் 10ஆம் நாள் தனது 93ஆம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

**அன்பான வாலிபர்களே! தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது என்பதை ஜார்ஜ் முல்லர் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ள முடிகிறது. நீங்களும் வசனத்தை நேசியுங்கள்! வாசியுங்கள்! உயிர் மீட்சி அடையுங்கள்!**

# பரபரப்பு செய்திகள்

Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திலும் பரபரப்பு செய்திகள் என்னும் இத்தொடர் மூலமாய் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் ஒரு Special ஆன மாதம். என்னன்னு சொல்லுங்க பார்க்கலாம்.

ம்...ரொம்பவே Correctஆ சொன்னீங்க! குறும்புகளை ரசித்து, குழப்பங்களைத் தீர்த்து, தவறுகள் தவிர்த்து, தன்னம்பிக்கை கொடுத்துத் தோல்வியைப் பழக்கி, வெற்றிக்கு வழி வகுத்துப் பொறாமையின்றி பெருமை பேசித் தோழமையுடன் மாணவர்களை வாழ்த்திடும் ஆசிரியர்களைக் கொண்டாடும் மாதம். எனவே, இந்தத் தொடரை வாசிக்கின்ற ஆசிரியர்களுக்கு எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்.



மற்றவர்களுக்கு உத்தரவிட்டே பழக்கப்பட்டிருக்கும் ஓர் அதிபதிக்கு என்னே மனத்தாழ்மையான வார்த்தைகள் இவை! ‘‘ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகரும் உண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான்’’ என்றான்.

## சரிங்க... வாங்க... தொடருக்குள் போகலாமா?

வேதாகமத்தில் நூற்றுக்கு அதிபதிக்குப் பிரியமான ஒரு வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையிலிருந்தான். தன்னுடைய வேலைக்காரனை இயேசு குணமாக்கவேண்டுமென்று அவன் விரும்பினான். இயேசு தயங்காமல் அவர்களுடனேகூடப் போனார். என்றபோதிலும், வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி, ‘‘ஆண்டவரே! நீர் வருத்தப்பட வேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல’’ என்றான்.



இயேசு இதைக் கேட்டபோது ஆச்சரியப்பட்டார். ‘‘இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்,’’ என்றார். அவன் கேட்டுக்கொண்டபடியே தம்முடைய வார்த்தையினால் அதிபதியின் வேலைக்காரனை குணப்படுத்துகிறார்.

**என்னது ஒரே வார்த்தையில் அற்புதமா? அதுவும் இயேசு வீட்டிற்குள் செல்லாமலே தூரத்திலிருந்து சொன்ன ஒரே வார்த்தையில் அற்புதமா? எவ்வளவு ஆச்சரியம் friends.**

இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட அற்புதம் நடக்குமா என்று யோசித்துக் கொண்டிருந்தபொழுது, திருப்பூர் பட்டணத்திலிருந்து ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது. அந்தப் பட்டணத்தில் கல்வாரிக் கரங்கள் என்ற ஒரு ஜெபக்குழு இயங்கி வருகிறது. இவர்கள் தேசத்திற்காகக் கூடி ஜெபிப்பது மட்டுமல்லாமல் கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷ ஊழியம் செய்து, ஏழை எளிய மக்களுக்கும் உதவி செய்து வருகின்றனர். இதில் இணைந்து ஜெபிக்கும் ஒரு சகோதரி, தன் வீட்டின் அருகாமையில் கால்களில் நரம்புகள் பாதிக்கப்பட்டு இரத்த ஓட்டம் தடைப்பட்டு கால்கள் வீங்கின நிலமையில், படுத்தப்படுக்கையாக மிகவும் கவலைக்கிடமாக இருந்த இரத்னா என்ற பாட்டியைக் கண்டு, இவர் எப்படியாவது சுகம் பெற வேண்டும் என்று பாரம் கொண்டார். மருத்துவர்களோ இந்தப் பாட்டி மூன்று மாதங்கள்தான் உயிரோடு இருப்பார்கள் என்று சொல்லிவிட்டனர். இச்செய்தியை கேட்ட அந்தச் சகோதரி சுகம் கொடுக்கும் இயேசுவை பற்றிச் சொல்ல அந்தப் பாட்டியின் வீட்டிற்கு சென்றார். அந்தப் பாட்டியோ அந்தச் சகோதரியை உள்ளே விடவில்லை. "நீ என் வீட்டிற்குள் வரக் கூடாது" என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஆனாலும் அந்தச் சகோதரி திரும்பிச் செல்லாமல் நான் உங்கள் வீட்டிற்குள் வரவில்லை ஆனால் உங்கள் வீட்டிற்கு வெளியே நின்று இயேசுவைப் பற்றிக் கூறுகிறேன் என்று, இயேசு செய்த அற்புதங்களைப் பற்றிச் சொல்லி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார். இதேபோல் சிறிது நாட்கள் தொடர்ந்து அவர்கள் வீட்டிற்கு வெளியே நின்று ஜெபம் பண்ணி வந்தார். என்ன ஆச்சரியம் கொஞ்சம் கொஞ்சமாகப் பாட்டியின் கால்களில் மாற்றம் தெரிந்தது. அதைக் கண்ட அந்தப் பாட்டி அவர்களை வீட்டிற்குள் அழைத்து ஜெபிக்க ஆரம்பித்தார். இந்தச் சகோதரி தங்களது குழுவில் தினமும் அதிகாலை 5 மணிக்கு நடக்கும் குடும்பங்களுக்கான **Conference Call prayer** பற்றிக் கூறவே, இந்தப் பாட்டியும் அதில் இணைந்தார். அந்த **Conference Call prayer**ல் தேவனுடைய வார்த்தையைப் பற்றிச் சிறிது நேரம் சொல்லி ஜெபிப்பார்கள். அந்த வார்த்தையைக் கேட்கக் கேட்க அந்தப் பாட்டியின் இருதயம் விசுவாசம் அடைந்தது. அந்த வார்த்தைகளை வைத்துப் பாட்டி ஜெபிக்க ஜெபிக்க கால்களில் உள்ள வீக்கம் குறைய ஆரம்பித்தது. புண்கள் ஆறியது. பாட்டி படுக்கையை விட்டு எழும்பினார். இதைக் கண்ட அவரது குடும்பத்தார் ஆச்சரியப்பட்டு அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றபொழுது மருத்துவரால் நம்ப முடியவில்லை. இது எப்படி நடந்தது என்று ஆச்சரியப்பட்டார். ஏனென்றால் பாட்டிக்கு எடுத்த அனைத்து **Test results**ம் **normal** என்று வந்திருந்தது. நரம்புகளில் இரத்த ஓட்டம் சீராக இருந்தது. இயேசுவைப் பற்றி அறியாத அந்தப் பாட்டியும் அவரது குடும்பத்தினரும் இப்பொழுது இயேசுவுக்கு விசுவாசிகளானது மட்டுமன்றி அவர்களது மளிகை கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கும் இயேசுவைப் பற்றிச் சுவிசேஷத்தை கூறிக் கொண்டிருக்கின்றனர்.



இந்த ஒரு அற்புதம் மட்டுமல்ல நண்பர்களே, இப்படிப்பட்ட அநேக அற்புதங்கள் அந்த ஜெபக்குழு நடத்தும் **Conference Call prayer** மூலம் நடப்பதாக நமக்குச் செய்தி வந்துள்ளது. எப்படி தூரத்திலிருந்து இயேசு சொன்ன வார்த்தை அந்த நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகப்படுத்தியதோ, அதேபோல் இந்தப் பாட்டி தூரத்திலிருந்து கேட்ட தேவனுடைய வார்த்தையும் அவரைச் சுகப்படுத்தியது. இன்று நாமும் அநேக **Conference Call prayer**ல் இணைந்து ஜெபிக்கிறோம். அந்த ஜெபங்களில் நாம் உண்மையாக உள்ளோமா? அல்லது அந்த ஜெபத்தில் இணைந்து விட்டு ஒரு பக்கம் **mobile**ல் ஜெபம் நடக்க, இன்னொரு பக்கம் நமது வேலைகளைப் பார்க்கிறோமா?அல்லது **mobile**ல் **prayer** நடக்கும் பொழுதே வேறொரு **App**-க்கு சென்று அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோமா? **Conference Call prayer** எவ்வளவு வல்லமையுள்ளது என்பதைப் பாருங்கள்! மரணப் படுக்கையில் இருந்த பாட்டியை எழுப்பக்கூடுமானால், நம்முடைய எவ்வித சூழ்நிலையையும் மாற்றக்கூடிய வல்லமை நாம் இணைந்து ஜெபிக்கும் ஜெபத்திற்கு உண்டு. அதற்கு நாம் விலைக்கிரயம் கொடுத்து அர்ப்பணிப்போடும், வைராக்கியத்தோடும் இப்படிப்பட்ட அற்புதங்கள் நடக்க தேவனிடம் ஜெபிக்க வேண்டும்.

மற்றுமொரு பரபரப்பு செய்தியுடன் அடுத்த மாதம் உங்களைச் சந்திக்கிறேன்.

(செய்திகள் தொடரும்)

# ஜெபக் கையேடு

செப்டம்பர் 2025

## விவசாயிகள் தற்கொலை

2025 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில், மகாராஷ்டிராவில் 767 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். மகாராஷ்டிராவில் தினசரி 8 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இந்தியாவில் வருடத்திற்கு 1374 இலட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது. 25% அரிசி மேற்கு வங்க மாநிலத்தில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. மழைப் பொழிவு, காலநிலை மாற்றம், நிலத்தின் உற்பத்தி தன்மை, பூச்சிகள் ஆகியவை உற்பத்தியைப் பாதிக்கிறது. குறைந்த மகசூல், கடன் மற்றும் போதுமான நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில், மகாராஷ்டிராவில் 2,635 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

### ஜெப குறிப்புகள்

1. விவசாயிகளின் பாதுகாப்பிற்காகவும், தற்கொலை எண்ணங்கள் மாறவும் ஜெபிப்போம்.

2. இந்தியாவில் உற்பத்தியாகும் அரிசி, சரியான விலைக்குக் கொள்முதல் செய்யப்படவும், விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லாத விலைக்கு விற்கப்படவும் ஜெபிப்போம்.

3. மழை மற்றும் பூச்சிகளினால் விவசாயம் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும், உற்பத்தி அதிகரிக்கவும் ஜெபிப்போம்.

4. விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் மற்றும் உரங்கள் தகுந்த விலைக்குக் கொடுக்க அரசு ஆவன செய்ய ஜெபிப்போம்.

5. விவசாயத்திற்கு மின்சாரம் தடையின்றி கிடைக்கப் பெற ஜெபிப்போம்.



## மின்சார வாரியம்

இந்தியாவில் மின்சார வாரியத்தில் 27 இலட்சம் பணியாளர்கள் பணி செய்கிறார்கள். 33.3 கோடி பேர் நுகர்வோராக இருக்கிறார்கள். மணிக்கு 1800 டெரா வாட் மின்சாரம் உபயோகிக்கப் படுகிறது. ஒவ்வொரு வருடமும் 6% மின்சார தேவை அதிகரிக்கிறது. தொழிற்சாலைகள், வீடு உபயோகத்திற்கு மற்றும் விவசாயத்திற்கு மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் மின்சார உற்பத்தி பெரும்பாலும் அனல் மின் நிலையங்கள் மூலம் செய்யப்படுகிறது. புனல் மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி ஆதாரங்களிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்சார உற்பத்தியின் பங்கு 2029-30ஆம் ஆண்டில் 64%ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜெபக்குறிப்பு

1. மின்சார வாரியத்தில் பணிபுரியும் 27 இலட்சம் பணியாளரின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

2. மின்சாரத்தை வீணாக்காமல் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு ஜனங்களுக்கு உண்டாக ஜெபிப்போம்.

3. இந்தியாவின் அனைத்து வீடுகளிலும் மின்சார வசதி ஏற்படுத்தப்பட ஜெபிப்போம்.

4. மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்படவும், மின் நிலையங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவும் ஜெபிப்போம்.

5. மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கப் பெறவும், மின் நிலையங்கள் பராமரிக்கப்படவும் ஜெபிப்போம்.





## பாலியல் வன்கொடுமை வழக்குகள்

இந்தியாவில் சராசரியாகத் தினமும் 86 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இதில் 82 வழக்குகளில் பாலியல் வன்கொடுமை செய்தவர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிந்த நபராகவே இருக்கிறார். இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 4 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகின்றன. மேலும், இந்தியாவில் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களே அதிக அளவில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுகின்றனர். 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை, 1.89 லட்சம் வழக்குகளில், 1.13 லட்சம் பெண்கள் 18 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 4ல் ஒரு பெண் 16 வயதிலிருந்தே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். 6ல் ஒரு குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. 18ல் 1 ஆண் 16 வயதிலிருந்தே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். 2024ஆம் ஆண்டில் 71,227 பாலியல் வன்கொடுமைகள் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டன.

### ஜெபக்குறிப்புகள்

1. பாலியல் வன்கொடுமை வழக்குகள் சீக்கிரத்தில் முடிக்கப்பெற நீதித்துறை நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.
2. ஒரு மணி நேரத்திற்கு 4 வழக்குகள் பதிவாகும் இந்திய தேசத்தின் இந்த அவல நிலை மாற ஜெபிப்போம்.
3. பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட நபர்கள் இதிலிருந்து வெளிவரவும், இதற்குக் காரணமாக இருக்கிறவர்களுக்கு நீதிமன்றம் தகுந்த தண்டனை கொடுக்கவும் ஜெபிப்போம்.
4. அதிகமாகப் பாதிக்கப்படும் பெண்களுக்கு மறு வாழ்வு மையங்கள் உதவிகள் செய்ய ஜெபிப்போம்.
5. சிறு வயதிலேயே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் பெண் பிள்ளைகள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு உண்டாக ஜெபிப்போம்.



## இரயில்வேத் துறை

இந்தியாவில் 13,169 பயணிகள் இரயில்களும், 8739 சரக்கு இரயில்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுமார் 12 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளில் 219 ரயில் விபத்துகள் நடந்துள்ளன. 2018-19-ம் ஆண்டில் 59 இரயில்களும், 2019-20-ம் ஆண்டில் 55 இரயில்களும், 2020-21-ம் ஆண்டு 22 இரயில்களும், 2021-22-ம் ஆண்டில் 35 இரயில்களும் 2022-23-ம் ஆண்டில் 48 இரயில்களும் என மொத்தம் 219 ரயில்கள் விபத்தில் சிக்கியதாகத் தெரிவிக்கபட்டுள்ளது. 2023-24ல் மட்டும் 313 பயணிகள் பலி, 1000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் 638 விபத்துகள், 748 பேர் பலி, 1500க்கும் மேற்பட்டோர் படுகாயம். நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களையும் இணைக்கும் வகையில் 1.06 லட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு ரயில்வே வழித்தடம் இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில், 638 ரயில் விபத்துகள் நடந்திருக்கின்றன. 748 பேர் பலியாகியிருக்கிறார்கள். 1500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

### ஜெபக்குறிப்புகள்

1. இரயில்வேத் துறையில் பணிபுரியும் 12 இலட்சம் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
2. இரயில் விபத்துகள் தடுக்கப்படவும், வழித்தடங்கள் சீரமைக்கப்படவும் அரசு ஆவன செய்ய ஜெபிப்போம்.
3. தொடர்ச்சியாக அதிக தூரம் வண்டியை ஓட்டுபவர்களுக்கு வேலை நேரத்தை குறைத்து, அதற்கு வேண்டிய ஆட்கள் நியமித்து காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட ஜெபிப்போம்.
4. சிக்னல்களில் உள்ள பாதிப்புகள் அகற்றப்படவும், தகுந்த பாதுகாப்பு வளையங்கள் அமைக்கப்படவும் ஜெபிப்போம்.
5. இதற்கு மேலும் எந்த மரண சம்பவங்களும் நடைபெறாதபடி சரியான முறையில் இரயில்வே துறை செயல்பட வேண்டிய ஞானம் ஒவ்வொருவருக்கும் உண்டாக ஜெபிப்போம்.





# ஆசரிப்பு கூடாரம்

ஆசரிப்பு கூடாரத்தில் ஊழியம் செய்யவே தேவன் ஆசாரியர்களை தெரிந்து கொண்டார். இந்த மாதம் ஆசாரியர்களின் ஊழியங்களைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்! நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்றார் (யாத். 19:5,6).

கர்த்தர் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுத்தார். வேறு பிரிக்கப்பட்ட லேவியரிலிருந்து அவர் ஆரோனையும் அவன் குமாரனின் வம்சத்தினரையும் ஆசாரியர்களாகத் தெரிந்து கொண்டு அவர்களை ஆசாரியர்களாக அபிஷேகித்த பிறகே பரிசுத்த ஸ்தலத்தில் பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டார்கள்.

### பிரகாரத்தில் பலிகளை செலுத்துவது

கர்த்தருடைய சந்நிதியில் ஜனங்கள் செய்த பாவங்களுக்காக ஆசாரியன் பலிகளை செலுத்தி பாவநிவர்த்தி செய்ய வேண்டும். ஆசாரியன் காலை தோறும் பலிபீடத்தின் மேல் கட்டைகளைப் போட்டுப் பலிகளை தகனிக்க வேண்டும். பின் சணல் நூல் வஸ்திரம் தரித்து பலிபீடத்தின் அக்கினியில் எரிந்த சாம்பலை பலிபீடத்திற்கு பக்கத்தில் கொட்டி பின்பு வேறு வஸ்திரத்தை உடுத்தி சாம்பலை பாளையத்திற்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்தில் கொட்ட வேண்டும். பலிபீடத்தின் மேல் அக்கினி அவியாமல் எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.

பலியின் இரத்தத்தை பலிபீடத்தின் மேல் கொம்புகளின் மேல் பூசி மற்ற இரத்தத்தை பலிபீடத்தின் அடியிலே ஊற்ற வேண்டும். பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கு எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்ற வேண்டும்.

பரிசுத்தமான மேஜையின் மேல் அப்பங்களை ஓய்வு நாள்தோறும் அடுக்கி வைத்துத் தூபவர்க்கம் போட வேண்டும். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் பிரவேசித்து, ரத்தத்திலே கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்தின் மேல் தெளித்து பின்பு கொஞ்சம் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழு தரம் தெளித்து இஸ்ரவேல் ஜனங்களுடைய சகல பாவங்களுக்கும் பாவ நிவர்த்தி செய்ய வேண்டும்.

### ஆசாரியன் செய்ய வேண்டியவை:



- ஜனங்களிடத்தில்:இஸ்ரவேலர் எல்லாரும் கேட்கும்படி நியாயப்பிரமாணத்தை வாசிக்க வேண்டும். குஷ்டரோகத்தை குறித்து போதிக்க வேண்டும்.
- சுத்திகரிக்கிற ஆசாரியன், குஷ்ட தோஷத்தைக் கண்டறிந்து குஷ்டமற்றவனை சுத்தம் உள்ளவன் என்று தீர்க்க வேண்டும்.
- ஜனங்களை நியாயந்தீர்த்து நியாயம் இன்னதென்று அறிவிப்பார்கள்.
- ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்.
- யுத்தம் செய்யத் தொடங்கும்போது ஆசாரியன் திடன்சொல்ல ஜனங்களிடம் பேச வேண்டும்.

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனும் அவன் குமாரரும் நியமிக்கப்பட்டார்கள். ஆசாரியர்களின் மூன்று பிரதான ஊழியங்களை உபாகமம் 10:8ல் வாசிக்கிறோம்.

### கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கு...



ஆம், இஸ்ரவேல் பாளையம் புறப்படும்போது உடன்படிக்கைப் பெட்டியைப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆசாரியர்கள் சுமக்க வேண்டும். நாமும் உடன்படிக்கை பெட்டியாகிய கர்த்தருடைய வார்த்தை, வல்லமை மற்றும் மகிமையை சுமக்க வேண்டும்.


### கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கு...

கர்த்தர் இஸ்ரவேலை அழைக்கும் போதே எனக்கு ஆராதனை செய்யும்படி என் ஜனங்களைப் போகவிடு என்றார். நம்மைக் குறித்தும், இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள் என்றார். ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தை பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக் கொள்ளக்கடவோம்...

### அவர் நாமத்தைக் கொண்டு ஆசீர்வதிப்பதற்கு...

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு சித்தமும் பிரியமுமாய் இருக்கிறது. நம்மைப் பார்த்து வேதம் சொல்கிறது, நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்கள் என்று அறிந்து ஆசீர்வதியுங்கள். கடைசி கால ஆசாரியர்களாகிய நாம் பாவம் செய்கிற மனிதர்களுக்காகப் பலியாகப்பட்ட இயேசு கிறிஸ்து மூலமாக மன்றாடவும் சகல மனிதர்களும் பரிசுத்தமடையவும் பரலோக பாக்கியத்தை அடையவும் கர்த்தருடைய வார்த்தைகளைச் சுவிசேஷமாக அறிவிக்க வேண்டும்.





# எழுப்புதலின் விதைகள்!

கடைசிகால எழுப்புதலின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் வாலிப தம்பி, தங்கச்சி! ஒவ்வொரு மாதமும் எழுப்புதலின் விதைகள் என்ற பகுதி மூலமாக மிஷனெரிகள் பாடுகளின் மத்தியில், எப்படி எழுப்புதலுக்காக வித்திட்டார்கள் என்பதைப் பற்றிப் பார்த்து வருகிறோம். இந்த மாதமும் கிறிஸ்துவின் இராஜ்யம் கட்டப்படுவதற்கு எல்லாவற்றையும் துறந்து அயராது உழைத்த மிஷனெரி ஜான் தாமஸ் டக்கர் அவர்களைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம்.

1807ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் தேதி அயர்லாந்தில் பிறந்த இவர், சிறுவயதிலேயே மிகவும் பக்தியிலும் ஒழுக்கத்திலும் வளர்க்கப்பட்டார். 19ம் வயதில் ஒரு சிறந்த வழக்கறிஞராக வேண்டுமென்று விரும்பி, சட்ட கல்லூரியில் பயின்று வழக்கறிஞராகப் பணி செய்தார். தன்னுடைய வாலிப வயதில் நற்செய்திப் பணியையும் செய்து வந்தார்.

1827ம் ஆண்டு அயர்லாந்தில் சர்ச் மிஷன் சொசைட்டி மூலம் நடத்தப்பட்ட மிஷனெரி கூடுகையில் இயேசுவின் நற்செய்திப் பணியை முழுநேரமாகச் செய்ய ஆண்டவர் அழைப்பதை உணர்ந்து, தான் ஆசையாகச் செய்து வந்த வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு 1833ம் ஆண்டு லண்டனில் உள்ள ஒரு வேதாகம கல்லூரியில் சேர்ந்து படித்து முடித்து, 1836ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் தேதி இங்கிலாந்தில் குருவானவராகப் பொறுப்பேற்றார்.

1836ம் ஆண்டு **CMS** மிஷன் மூலம் ஜான் தாமஸ் அவர்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டு, ஆறே மாதங்களில் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, 1837ம் ஆண்டு பிப்ரவரி 5ம் தேதி திருநெல்வேலி மாவட்டம் மெஞ்ஞானபுரம் என்ற கிராமத்திற்கு நற்செய்திபணி அறிவிக்க வந்தார். 1838ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் தேதி மேரி டேவிசை திருமணம் செய்தார். பின்பு தம்பதிகளாய் இணைந்து அங்குள்ள பல கிராமங்களுக்கு நடந்து சென்றே நற்செய்திப்பணியை அறிவித்தார்கள். அவர்களுக்கு 3 பிள்ளைகளும் பிறந்தனர். ஜான் தாமஸ் அவர்கள் நற்செய்திப்பணி அறிவித்த பகுதிகள் தரிசுநிலங்களாக இருந்ததால், அங்குள்ள மக்களின் பொருளாதார வாழ்க்கை மிகவும் குறைவாக இருந்தது. எனவே நிலத்தைப் பண்படுத்தி, நிலத்தின் தன்மைக்கு ஏற்ற மரங்களை நட்டு, கிராமங்களைச் சுத்தப்படுத்தி, பல வகையான மரங்களை நட்டு, வறண்டு போயிருந்த கிராமங்களைப் பூஞ்சோலையாக மாற்றினார். இவரது சேவையைக் கண்டு, முதலாவது பனை மரம் ஏறும் மக்கள் நற்செய்தியைக் கேட்டு, இயேசுவை ஏற்றுக் கொண்டதால் அவர்களுக்கென்று ஒரு சிறிய ஆலயத்தைக் கட்டினார்.

1844ல் பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பித்தார். அநாதை மற்றும் கைவிடப்பட்ட பிள்ளைகளுக்கென்று விடுதிகளையும் கட்டினார். இதனால் இயேசுவை அறியாத அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர்கள் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். அங்குப் பயின்ற மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினர். மெஞ்ஞானபுரத்தை சுற்றியுள்ள கிராம மக்கள் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, காலை, மாலை வேளைகளில் ஆராதனை நடத்துவதற்கு உபதேசியார்களையும் நியமித்தார்.

ஜான் தாமஸ் அவர்களின் நற்செய்தி பணியையும் சமுதாய சீர்திருத்தப் பணிகளையும் பார்த்துக் கொண்டிருந்த எதிர்ப்பாளர்கள், கூரையால்கட்டப் பட்டிருந்த ஆலயங்களைத் தீயிட்டு கொளுத்தினார்கள். கிறிஸ்தவர்களின் வீடுகளையும், உடைமைகளையும், அவர்களுடைய விளை நிலங்களையும் நாசப்படுத்தி அவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்தார்கள். கிறிஸ்தவர்கள் இவற்றை பொறுமையாகச் சகித்தார்கள்.


துன்பமான நேரங்களில் தேவனை இன்னும் உறுதியாகப் பற்றிக்கொண்டு விசுவாசத்தில் பெலப்பட்டார்கள். ஒருவரும் கிறிஸ்துவைவிட்டுபின் வாங்காததால் இது எதிர்ப்பாளர்களுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

1845ம் ஆண்டு மெஞ்ஞானபுரத்திலும் அதின் சுற்று வட்டாரத்திலும் கடுமையான சூறாவளிக் காற்று தாக்கியதோடு, காலரா, வாந்தி பேதி நோய் பல கிராமங்களில் பரவ ஆரம்பித்தது. இதற்கிடையே கடுமையான பஞ்சமும், குடிநீர் தட்டுப்பாடும் உண்டாயிற்று. எங்குப் பார்த்தாலும் மரண ஓலங்கள் கேட்டன. இதில் ஜாண் தாமஸ் மகள் மேரி ஜேன்னும் மரித்துப் போய்விட்டாள். பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய்களுக்கு இந்த மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதே காரணம் என்று குற்றம் சாட்டினார்கள். ஆகவே இனி இவர் நற்செய்திப் பணியை இங்குச் செய்யக் கூடாது என்று அவருக்கு விரோதமாக வன்முறையில் ஈடுபட்டு, பயமுறுத்தினார்கள். ஆயினும் அவர் கொஞ்சம்கூட பயப்படாமல், தன் மகள் மரித்துப்போன சூழ்நிலையிலும் மனம் தளராமல், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கென்று கிராமங்களுக்குச் சென்று கடுமையாக உழைத்து, மக்களுக்கு உதவி செய்தார். அவரது மனைவி பெண்களின் மறுவாழ்வுக்கென்று சுயஉதவி குழுக்களை உருவாக்கிப் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்கள். பெண்களுக்குக் கல்வி அறிவு கொடுப்பதற்காக ஒரு பாடசாலையை ஏற்படுத்தினார்.

நற்செய்தி பணியையும், சமுதாய பணிகளையும், பெண்கள் முன்னேற்றப் பணிகளையும் கண்ட அந்தக் கிராம மக்கள் அநேகர், இயேசுக் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். எனவே ஆண்டவரை ஆராதிப்பதற்கென்று ஒரு ஆலயம் கட்ட முயற்சி செய்து, 1844ம் ஆண்டு ஜுன் மாதம் 20ம் தேதி ஆரம்பித்து, 1847ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் தேதி ஆலயத்தைக் கட்டிமுடித்து, தூய பவுலின் ஆலயம் என்ற பெயரிட்டு பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. மெஞ்ஞானபுரத்தில் 1857ம் ஆண்டுவரை 5,500ஆக இருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 1869ம் ஆண்டிற்குள் 45,000ஆக உயர்ந்தது.

அதுமட்டுமல்லாமல் வெள்ளாளன்விளை, ஆறுமுகநேரி, நாலுமாவடி, கடாட்சபுரம், காயாமொழி, பிரகாசபுரம், பண்ணவிளை, கிறிஸ்டியான் நகரம் போன்ற கிராமங்களில் பெரிய ஆலயங்களைக் கட்டினார். சுப்பிரமணியபுரம், இராசாமணிபுரம், பூவரசூர் கிராமங்களில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களும் இயேசுவை ஏற்றுக் கொண்டதால் அங்கும் ஆலயங்கள் கட்டப்பட்டன. இதுமட்டுமல்லாமல் 125 கிராமங்களில் நற்செய்தி அறிவித்து, ஆலயங்களைக் கட்டினார். 54 கல்விக்கூடங்களையும் கட்டினார். ஆலயங்களில் உபதேசிமார்களை ஏற்படுத்தி, நற்செய்தி பணிக்கென்று 54 சுவிசேஷகர்களை உருவாக்கினார். மக்களைப் பெலப்படுத்துவதற்காக 12 குருவானவர்களையும் நியமித்தார். இவருடைய அயராத உழைப்பினால் திருச்சபைகள் நன்கு வளர்ச்சி பெற்றன.

33 ஆண்டுகள் ஓயாமல் உழைத்து, மெஞ்ஞானபுரத்திற்கும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த ஜாண் தாமஸ் ஐயர் 1865ம் ஆண்டு மிகவும் பெலவீனப்பட்டார். இங்கிலாந்திற்கு போய் மருத்துவ சிகிச்சை பெற்று, சற்று சுகம் பெற்றதும் மெஞ்ஞானபுரத்து மக்களின் அன்பையும், பாசத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல், தான் மரித்தாலும்



திருநெல்வேலி மக்கள் மத்தியிலே மரிப்பேன் என்று பிடிவாதமாய் மீண்டும் மெஞ்ஞானபுரத்திற்கே திரும்பி வந்தார். ஜான் தாமஸ் அவர்களின் சரீரம் தொடர்ந்து பெலவீனப்பட்டு, தன்னுடைய 62ம் வயதில் 1870ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் தேதி நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

**உலக மேன்மையை, ஆடம்பர வாழ்க்கையை வெறுத்து, நம் இந்திய நாட்டை நேசித்து, ஆண்டவரின் அன்பை காண்பித்து, அவர் வார்த்தையை விதைத்து, தேசத்தை ஜெபத்தால் மூடி, பல எதிர்ப்புகள் மத்தியிலும் சபைகளைக் கட்டி எழுப்பி, ஜனங்கள் தடவியாகிலும் கர்த்தரை கண்டுகொள்ளத்தக்கதாகச் செய்தார். இன்றைக்கு நீங்கள் இத்தனைப் பாடுகளை சகித்துக் கொண்டு ஓட ஆயத்தமா?**




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
இயக்கப்படு! இயக்கப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (7TH SEP)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road, 9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (13TH SEP)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 2ND SUNDAY (14TH SEP)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (20TH SEP)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, \
71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 3RD SUNDAY (21ST SEP)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam 2.
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction,
Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SUNDAY (28TH SEP)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor, 305/E,
Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாட்டால் மூளையின் சிந்திக்கும் ஆற்றல் 47% குறைவு - ஆய்வில் தகவல்



செயற்கை நுண்ணறிவு தளங்களைப் பயன்படுத்துபவர்களது மூளையின் சிந்திக்கும் ஆற்றல் 47% குறைந்துவிட்டதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள தனியார் பல்கலைக்கழகமான Massachusetts Institute of Technology, செயற்கை நுண்ணறிவு தளமான chatgpt பயனர்களின் மூளையை ஆராய்ந்து, அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது. கடந்த 4 மாதங்களாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் chatgpt பயன்படுத்துபவர்களின் மூளையின் சிந்திக்கும் ஆற்றல் 47% குறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது சில நிமிடங்களுக்கு முன்பு எழுதிய ஒரு வாக்கியத்தைப் பலருக்கும் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை என்றும் அதே வேளையில் AI பயன்படுத்தாமல் எழுதியவர்களுக்கு இந்தப் பிரச்சனை ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஆகஸ்ட் 5, 2025 தினகரன்.

## இந்தியாவில் ஒரே நாளில் ரூ.70.70 கோடி பணப்பரிவர்த்தனை நடந்து, யுபிஐ பயன்பாடு புதிய மைல்கல்!



இந்தியாவில் யுபிஐ மூலம் கடந்த 2ம் தேதி ஒரே நாளில் ரூ.70.70 கோடி பணப்பரிவர்த்தனை நடந்துள்ளது. இதனை நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா உறுதி செய்துள்ளது. இதன் மூலம் இந்தியாவில் யுபிஐ பயன்பாடு புதிய மைல்கல் சாதனையை எட்டி உள்ளது. 2023ம் ஆண்டு உடன் ஒப்பிடும்போது, தற்போது யுபிஐ பணப்பரிவர்த்தனையின் எண்ணிக்கை 2 மடங்காக அதிகரித்துள்ளது.

அப்போது, 35 கோடியாக இருந்த தினசரி பணப்பரிவர்த்தனையின் எண்ணிக்கை 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரூ. 50 கோடியாக அதிகரித்துள்ளது. தற்போது ரூ.70 கோடியாக உயர்ந்துள்ளது. ஜூலை மாதம் ரூ. 65 கோடியாக இருந்த யுபிஐயில் தினசரி பணப்பரிவர்த்தனை, கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி 70 கோடியை எட்டி உள்ளது. கூகுள் பே, போன் பே, பேடிஎம், அமேசான் பே, BHIM எனப் பல்வேறு செயலிகளின் மூலம் இந்தியாவில் யுபிஐ பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுகிறது. நாளுக்கு நாள் இதன் பயனர்கள் மற்றும் பண பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆகஸ்ட் 6, 2025 தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# இது இல்ல Trendu



ஹலோ ப்ரெண்ட்ஸ்,
எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா? இந்த article மூலம்
மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.





## ஆராதனையில் மாதிரி

இந்த நாட்களில் கிறிஸ்தவ வாலிபர்கள் மத்தியில் ஆராதனை என்கிற காரியம் மிகவும் டிரெண்டியாய் இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் ஆராதனை என்றாலே அதிக இசையுடன் கூடிய பாடல்கள் மற்றும் நடனங்களின் கலவையாக உள்ளது. தேவ பிரசன்னத்திற்கு பதிலாக உணர்ச்சிகளுக்கு முக்கியதுவம் கொடுப்பதாக உள்ளது. வேதம் முழுவதும் நாம் பார்த்தோமென்றால், நடனமாடி ஆராதனை என்பது ஒரு தனிப்பட்ட மனிதனுடைய காரியமாகத்தான் உள்ளது.

எனக்குப் பிரியமான வாலிபர்களே! ''பரிசுத்த அலங்காரத்தோடு அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்'' என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் நம்முடைய சிந்தையும் செயல்பாடுகளும் எப்படி இருக்கிறது? எல்லாரும் நடனம் பண்ணுகிறார்கள் என்று நாமும் நடனம் பண்ணுவதும், மற்றவர்கள் உலகப் பிரகாரமான காரியத்தைச் செய்வது போல நாம் செய்வதும் தகுதியான ஆராதனையாக இருக்காது. ஆராதனையில் பரவசம் அல்ல பரிசுத்தம் முக்கியம்.

ஆமோஸ் தீர்க்கதரிசி புஸ்தகத்தில் ''உன் பாடல்களின் இரைச்சலை என்னிடமிருந்து அகற்று'' என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் நாம் கர்த்தருக்கு பிரியமான ஆராதனை செய்யும்போதுதான் ஆராதனை அங்கீகரிக்கப்படும். கர்த்தருக்கு பிரியம் இல்லாமல் நாம் ஏறெடுக்கிற எந்த ஒரு ஆராதனையும் கர்த்தரை பிரியப்படுத்தாது. அது அவருடைய காதுகளுக்கு இரைச்சலாகத் தான் தோன்றும்.

முக்கியமாகப் **friends,** முழு இருதயத்தோடு, முழு ஆத்துமாவோடு நாம் ஆராதிக்கிறோமா? என்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! ஆராதனை என்றால் அதில் தேவ பிரசன்னமும் மகிமையும் இருக்கிறது. ஆராதனை எங்கிருந்து புறப்பட்டது என்றால், ''பரலோகத்தில் கேருபீன்களும் சேராபீன்களும் ஓயாமல் கர்த்தரை பரிசுத்தர் பரிசுத்தர் என்று துதித்து கொண்டு இருக்கிறார்கள்''.

ஆரம்பத்தில் ஆராதனையை நடத்திய லூசிபர், என்றைக்கு பெருமையினால் விழுந்து போனானோ, அதன்பின் கர்த்தருக்கு பிரியமில்லாத ஆராதனையை ஜனங்களுக்குள் விதைத்துக் கொண்டிருக்கிறான். பிரண்ட்ஸ், ஆராதனையில் ஜாக்கிரதையாய் இருங்கள்.

''எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு; ஆனாலும் எல்லாம் எனக்குத் தகுதியாயிராது'' என்று பவுல் கூறுகிறார். நாம் ஆராதிக்கும்போது, நம்முடைய நடை, உடை எல்லாமே பரிசுத்தத்திற்கு ஏதுவாக இருக்க வேண்டும். பரிசுத்த குலைச்சல் மற்றும் இடறல் உண்டுபண்ணுகிற காரியங்களை நமக்குள் வைத்துக்கொண்டு, கர்த்தர் சொல்லாத காரியத்தைச் சொல்லி ஆராதிப்பது ஆராதனை அல்ல. கர்த்தருடைய நாமத்தை உயர்த்தும்போதுதான் அந்த ஆராதனை முழுமை அடையும்.

எனக்குப் பிரியமான பிரண்ட்ஸ், இந்த **youth stage**ல எதை நாம் பழகிக் கொள்கிறோமோ, எதை நாம் பற்றிக்கொள்கிறோமோ அதைத்தான் பின் நாட்களில் நம்முடைய சந்ததிக்கு நாம் கொண்டு போவோம். ஆராதனைதான் தேவப்பிரசன்னத்தை நம் மத்தியில் கொண்டு வரும். அதேநேரத்தில் அந்த ஆராதனை தவறாக இருக்கும் பட்சத்தில் கர்த்தருடைய கோபாக்கினை நம்மீது கடந்துவரும். **இந்த வாலிப வயதிலேயே கர்த்தரை ஆராதிப்பதில் உண்மையாக இருப்போம். இன்றிலிருந்து கர்த்தருக்கு பிரியமானபடி, பரிசுத்தத்தோடு நாம் அவரை ஆராதிப்போம்.** கர்த்தருக்கு பிரியமில்லாததை அகற்றி நம்முடைய **trend**ஐ மாற்றுவோம். நாம்தேவனோடு உறவாடுவோம்!

**Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847**
**Postal Registration No: TTN/26/2023-2025.**
**Date of Publication: 25 – 08 -2025**
**Date of Posting: 28th to 30th of every month.**
**Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.**
**Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.**




ஆசிரியர் தினம் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், செப்டம்பர் 5ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மாணவர்களின் ஆளுமை மற்றும் பண்புகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

## ஆசிரியர்கள் மாணவர்களுடன் நல்லுறவை வளர்க்க:

- ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாகக் கவனித்து, அவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.
- மாணவர்கள் செய்யும் நல்ல செயல்களைப் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்குப் பொறுமையாகப் பதில் அளிப்பதோடு, சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முயற்சியுங்கள்.
- வகுப்பறையில் மட்டுமல்லாமல், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்களுடன் பேசும்போது, அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு உதவும்.
- மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கும் வகையில், வகுப்பறையைச் சுவாரஸ்யமாக மாற்றுவது அவசியம்.

## மாணவர்கள் ஆசிரியர்களுடன் நல்லுறவை வளர்க்க:

- ஆசிரியரின் அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும் மதித்து நடந்து கொள்ளுங்கள்.
- சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையிலும், பள்ளி வளாகத்திலும் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள்.
- ஆசிரியர்களிடம் எப்போதும் நேர்மறையான அணுகுமுறையைக் கடைப்பிடியுங்கள்.
- படிப்பிலும், வகுப்பறையிலும் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.

இந்தக் காரியங்கள் அனைத்தையும் கடைபிடித்து ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்தால், சிறந்த கல்விச் சூழலை உருவாக்க முடியும்.